# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 19.09.2023 supeedsam.com supeedsam@gmail.com


# தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் சாகும் வரையான உண்ணாவிரத போராட்டம்

## கொட்டும் மழையிலும் நான்காவது நாளாக மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற்தரை கால்நடை வளர்ப்பாளர்கள் சுழற்சி முறையிலான போராட்டம்





(சுமன்)

கொட்டும் மழையிலும் நான்காவது நாளாக நேற்று மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற்தரை கால்நடை வளர்ப்பாளர்களின் சுழற்சி முறையிலான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரன் நேற்று போராட்ட களத்திற்கு விஜயம் மேற்கொண்டதுடன், கால்நடை வளர்ப்பாளர்களுடன் கலந்துரையாடினார்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருடன்

02 ஆம் பக்கத்தில்...

## ஊர்தி மீதான தாக்குதல் பெரும்பாண்மையின மக்கள் மத்தியில் வலுக்கும் கண்டனம்

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உள்ளிட்ட குழுவினர் மீது நேற்றையதினம் திருகோணமலையில் வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கு பெரும்பான்மையின மக்களிடையே பல்வேறு கண்டனங்கள் அதிகரித்து வருகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

02 ஆம் பக்கத்தில்...

## நினைவேந்தல் வாகனம் மீதான தாக்குதல் 6 பேருக்கும் விளக்கமறியல்



திருகோணமலையில் தியாகி திலீபன் நினைவேந்தல் வாகனம் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேருக்கும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட 14 பேரை காயப்படுத்தியமை மற்றும் வாகனத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஐ.நா. கூட்டத் தோடர் ஆரம்பம்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், எதிர்வரும் 21ம் திகதிவரை இந்த கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது.

2030 நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபீட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேறுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் உருவாக்குதல்

02 ஆம் பக்கத்தில்...

## ஊர்தி பவனிக்கு தடைவிதிக்க கோரிய வவுனியா போலிஸாரின் மனுவை நிராகரித்த நீதிமன்றம்

தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தியானது வவுனியாவில் பயணிப்பதற்கு தடை கோரி வவுனியா நீதிமன்றில் பொலிஸார் மனுத் தாக்கல் செய்த போதும், நீதிமன்றம் அதனை நிராகரித்துடன், குழப்பங்கள் ஏற்படாத வகையில் பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு நேற்று உத்தரவிட்டது.

தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் 'திலீபன் வழியில் வருகின்றோம்' என்னும் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனியா

02 ஆம் பக்கத்தில்...

## சீன உளவு கப்பலின் இலங்கை வருகைக்கு தமிழகத்தில் இருந்தும் கிளம்பும் எதிர்ப்பு



கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவிருக்கும் ஷி யான் உளவுக் கப்பலுக்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று இலங்கை அரசை இந்தியா எச்சரிக்க வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

ராமதாஸ் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளதாவது,

'சீனாவிலிருந்து புறப்பட்டுள்ள ஷி யான் 6 (Shi Yan 6) என்ற உளவுக் கப்பல் அடுத்த மாதம்

02 ஆம் பக்கத்தில்...

## மகிந்தவின் தோல்வியால் 100 பில்லியன் அமெரிக்க டோலர்களை இழந்த இலங்கை

2015இல் மகிந்த ராஜபக்ச தேர்தலில் தோற்காவிட்டால் இன்று 100 பில்லியன் அமெரிக்க டொலர் வளர்ச்சியடைந்த பொருளாதாரம் உள்ள நாடாக இலங்கை அபிவிருத்தி அடைந்திருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டிலுள்ள, கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், தொழிலாளிகள் ஆகியோரை நாங்கள் பாதுகாக்க

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100


Aadaa Finance GmbH



Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598
25605: cicero

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# கனடாவில் களைகட்டிய காரைதீவு பேராசிரியர் பாலசுந்தரத்திற்கான சிறப்பு பாராட்டு விழா!





(வி.ரி.சகாதேவராஜா)

கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்றம், கனடாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் இளைய தம்பி பாலசுந்தரம் அவர்களுக்கு பெரும் பாராட்டு விழா ஒன்றை (17) ஞாயிற்றுக்கிழமை மாலை நடாத்தியது.

பேராசிரியர் முனைவர் இளையதம்பி பாலசுந்தரம் அவர்களுக்கான வாழ்நாள் செயல் திறங்களுக்கான சிறப்பு பாராட்டு விழா(17) மாலை 5 மணிக்கு கனடா ஒன்றாரியோ தமிழ் இசைக்கலா மன்றத்தில் நடைபெற்றது .

கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்றத்துடன் அண்ணாமலை பல்கலைக் கழக கனடா வளாகம் ,கனடா கவிஞர் கழகம் ,கனடா தொல்காப்பியர் மன்றமும் இணைந்து விழாவை ஏற்பாடு செய்தது.

கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்ற தலைவர் எல். புருசோத்தமன் தலைமையில், விழாக்குழுத்தலைவர் எழுத்தாளர் கல்வியியலாளர் க. குமரகுரு ஒருங்கிணைப்பில் சிறப்பாக நடைபெற்றது.

கனடாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த பிரபல சமூக செயற்பாட்டாளர் வைத்திய கலாநிதி டாக்டர் அ.வரதராசன் வரவேற்றார்.

பேராசிரியர் முனைவர் இளையதம்பி பாலசுந்தரத்தின் மனைவி விமலா பாலசுந்தரம் அவர்களின் ஏக புத்திரன் கலாநிதி இளமாறன் பேரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

❝செந்தமிழ் பேரொளி❞ என்ற சிறப்பு பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு அதே பெயரில் சிறப்பு மலரும் வெளியிடப் பட்டது.

மன்ற செயலாளர் நித்திசிவானந்தராஜா பொருளாளர் எஸ். உதயகுமாரன் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பல்கலைக்கழக பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் என பல தரப்பட்ட பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பேராசிரியர் முனைவர் இளையதம்பி பாலசுந்தரம் கல்வியியலாளராகவும், துணிந்த எழுத்தாளராகவும், ஆழ்ந்த ஆய்வாளராகவும்,தமிழ் இலக்கியம் மொழியியல் பண்பாடு இந்து சமயம் சமூகம் போன்ற துறைகளில் கடந்த 50 ஆண்டுகளாக அயராது உழைத்து செயல் திறன்கள் செய்த அறிஞர்.

இவர் இதுவரை 22 நூல்களை வெளியிட்டுள்ளார் அவர் பணிகளைப் பாராட்டி இப் பெருவிழா எடுக்கப்படுகிறது.

இதே வேளை பேராசிரியர் முனைவர் இளையதம்பி பாலசுந்தரம் மதுரை உலகத் தமிழ் சங்க இலக்கிய விருதுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







## சீன உளவு கப்பலின் இலங்கை வருகைக்கு தமிழகத்தில் இருந்தும்....

இலங்கையில் உள்ள கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களுக்கு வர விருப்பதாகவும், அங்கு 17 நாட்கள் தங்கியிருந்து ஆராய்ச்சியில் ஈடுபடப் போவதாகவும் கிடைத்துள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

சீன உளவுக் கப்பலின் ஆராய்ச்சி என்பது தென் மாநிலங்களை உளவு பார்ப்பது தான் என்பதால், இது தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு மிகப் பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. சீன உளவுக் கப்பல் ஷி யான் இரு நாட்களுக்கு முன் மலேஷியாவை அடுத்த மலாக்கா நீரிணைக்கு வந்து விட்டதாவும், அங்கிருந்து அக்டோபர் மாத இறுதியில் இலங்கையில் கொழும்பு, அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களுக்கு வந்து சேரும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மலாக்கா நீரிணையில் ஆய்வு மேற்கொள்ளாமல் உடனடியாக புறப்பட்டால், செப்டம்பர் 24 அல்லது 25ம் நாள் அக்கப்பல் இலங்கைக்கு வந்து சேரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இரு துறைமுகங்களிலும் மொத்தம் 17 நாட்கள் சீனக் கப்பல் நிறுத்தப்பட்டிருக்கும்; அப்போது பல ஆராய்ச்சிகள் செய்யப்படும் என தெரியவந்திருக்கிறது.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களுக்குள் நுழைய சீன உளவுக் கப்பலுக்கு இதுவரை அனுமதி அளிக்கப் படவில்லை என்றும், அதே நேரத்தில் அது தொடர்பான கோரிக்கை இலங்கை அரசின் ஆய்வில் இருப்பதாகவும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுவே ஒரு மோசடி.

இந்திய அரசின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி தான் சீனக் கப்பலுக்கு அனுமதி அளிக்காதது போல இலங்கை அரசு காட்டிக் கொள்கிறது. ஆனால், கடைசி நேரத்தில் சீன உளவுக் கப்பலுக்கு இலங்கை அரசு கண்டிப்பாக அனுமதி அளிக்கும் என்று கூறப்படுகிறது. அவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டால், அது இந்தியாவுக்கு, குறிப்பாக தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும்.

ஷி யான் உளவுக் கப்பல் மிகவும் சக்தி வாய்ந்தது ஆகும். பல நூறு கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள அனைத்து நிலைகளையும் செயற்கைக் கோள் உதவியுடன் உளவு பார்க்கும் திறன் இந்தக் கப்பலுக்கு உண்டு.

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டாலும், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டாலும் அங்கிருந்து தமிழகத்தில் உள்ள கூடங்குளம், கல்பாக்கம் அணுசக்தி ஆராய்ச்சி மையங்களையும், சென்னை, தூத்துக்குடி உள்ளிட்ட தென்னிந்தியாவின் ஆறு துறைமுகங்களையும் எளிதில் உளவு பார்த்து, அது குறித்த தகவல்களையும் சேகரித்து விட முடியும். அணு சக்தி ஆராய்ச்சி நிலையங்கள் இந்தியாவின் பாதுகாப்புடன் எத்தகைய தொடர்பு கொண்டவை என்பதை அறிந்தவர்களால், சீன கப்பலின் இலங்கை வருகை எத்தகைய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

ஷி யான் கப்பலால் இந்தியாவுக்கு ஆபத்து இல்லை என்று இந்த அச்சுறுத்தலை கடந்து செல்ல முடியாது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலும் சீனாவுக்கு சொந்தமான யுவான் வாங் என்ற கப்பல் இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி அம்பான்தோட்டை துறைமுகத்துக்கு கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. அந்தக் கப்பலால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டதையடுத்து, அக் கப்பல் அங்கிருந்து வெளியேற்றப்பட்டது. யுவான் வாங் 6 கப்பலால் இந்தியாவுக்கு எத்தகைய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படுமோ, அதை விட மோசமான அச்சுறுத்தல் ஷி யான் கப்பலாலும் ஏற்படும்.

அதுமட்டுமின்றி, யுவான் வாங் கப்பலை விட அதிகமாக 17 நாட்களுக்கு ஷி யான் கப்பல் இலங்கை துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் என்பதால், தென்னிந்தியாவில் உள்ள பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து முக்கிய நிலைகளையும் சீனா உளவு பார்த்து தகவல்களை செகரித்து வைத்துக் கொள்ள முடியும். அதை எப்போது வேண்டுமானாலும் இந்தியாவுக்கு எதிராக சீன அரசால் பயன்படுத்த முடியாது. இது இந்தியாவுக்கு மிகவும் ஆபத்து ஆகும்.

ஆசியாவை தனது கட்டுக்குள் வைத்திருக்கும் தனது எதிர்காலத் திட்டத்துக்கு இந்தியா தான் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்று கருதும் சீனா, இந்தியாவைச் சுற்றிலும் தனது பாதுகாப்பு நிலைகளை ஏற்படுத்தி, ராணுவ ரீதியாக முடக்குவதற்கு திட்டமிட்டு வருகிறது. அதற்காகவே ஒன்றன்பின் ஒன்றாக உளவுக்கப்பல்களை அனுப்பி இந்தியாவை உளவு பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

கடந்த காலங்களில் கடந்த 2014ம் ஆண்டு அக்டோபர் 31ம் திகதி சீனாவின் சாங்ஷெங் -2 நீர் மூழ்கிக் கப்பலும், சாங் ஜிங் தாவ் போக் கப்பலும் கொழும்பு துறைமுகத்துக்கு வந்து 5 நாட்கள் இந்திய நிலைகளை உளவு பார்த்தன. கடந்த ஆண்டு யுவான் வாங் உளவுக் கப்பல் வந்தது. அதைத்தொடர்ந்து கடந்த இரு வாரங்களுக்கு முன் ஹாய் யாங் 24 என்ற போர்க்கப்பல் இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி கொழும்பு துறைமுகத்துக்கு வந்து, இரு நாட்கள் இருந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சென்றுள்ளது.

அடுத்தக்கட்டமாக வரும் ஷி யான் கப்பலுக்கு இதுவரை அனுமதி அளிக்கப்படவில்லை என இலங்கை தரப்பில் கூறப்பட்டாலும், அனுமதி அளிக்க இலங்கை அரசு முடிவெடுத்து விட்டதாகவே தெரிகிறது. சீனக் கப்பலின் இலங்கை வருகை என்பது ஐக்கிய நாடுகள் கடல் சட்ட உடன்படிக்கையை மீறிய செயல் ஆகும்.

சீனக் கப்பலை இலங்கை அனுமதிப்பது 1987ம் ஆண்டு இந்திய, இலங்கை அமைதி உடன்பாட்டிற்கு எதிரான செயலாகும். அந்த உடன்பாட்டின்படி இலங்கை மண்ணை இந்திய ஒற்றுமை, ஒருமைப் பாட்டுக்கு எதிரான செயல்களுக்கு பயன்படுத்தக்கூடாது. சீனக் கப்பலை அனுமதிப்பது இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதால் அதை இலங்கை அரசு ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. சீனா தொடர்பான சிக்கல்களைப் பொறுத்தவரை இலங்கை அரசு இரட்டை வேடம் போடுகிறது என்பதையும் இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

அண்மையில், டெல்லி வந்த இலங்கை அதிபர் ரணில் விக்கிரம சிங்க, இந்தியாவுக்கு எதிரான செயல்களுக்கு இலங்கை மண் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்க மாட்டோம் என்று உறுதியளித்தார். ஆனால், அதற்கு முற்றிலும் மாறாக சீன உளவுக் கப்பல்களுக்கு இலங்கை தொடர்ந்து கம்பளம் விரித்து வருகிறது.

இதை புரிந்து கொண்டு, இலங்கை அரசுடனான நமது பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைகளில் திருத்தங்களை செய்ய வேண்டும். கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவிருக்கும் ஷி யான் உளவுக் கப்பலுக்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று இலங்கை அரசை இந்தியா எச்சரிக்க வேண்டும். அதை ஏற்க இலங்கை அரசு மறுத்தால் அந்நாட்டுக்கு மிகக் கடுமையான பாடத்தை மத்திய அரசு புகட்ட வேண்டும்.❞ என ராமதாஸ் கூறியுள்ளார்.

## ஐ.நா. கூட்டத் தொடர் ஆரம்பம்

என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த ஆண்டு கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க (17) அதிகாலை நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி கூட்டத்தொடரில் பங்கேற்று, தனது விசேட உரையாற்ற உள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருக்கு இணையாக இன்று நடைபெறவுள்ள, 2030 ஆம் ஆண்டிற்கான மாற்றம் மற்றும் விரைவான நடவடிக்கைகள் என்பவற்றுக்காக உலக தலைவர்களினால் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் 2023 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உச்சி மாநாட்டின் அரச தலைவர்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

மேலும், அன்று ஜனாதிபதி, உச்சி மாநாட்டில் பங்கேற்கும் பல அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதுடன், கடல்சார் நாடுகளுக்கான ஆசிய-பசுபிக் தீவு நாடுகள் கலந்துரையாடலிலும் பங்கெற்கவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## மகிந்தவின் தோல்வியால் 100 பில்லியன்...

வேண்டும். அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டத்தினை முன்னெடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் எமது கிராமங்களில் அஸ்வெசும திட்டம் தொடர்பில் பெரிதும் பேசப்பட்டது. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி இந்த சமுர்த்தியை குறைந்தது ஒரு வருடமாவது நீடிக்கச் செய்தாலே இது சாத்தியமாகும் என நாங்கள் நினைக்கின்றோம்.

உடனடியாக இந்த நடவடிக்கைகளை நிறுத்தினால் மக்களுக்கு நியாயம் கிடைக்காது. அதேசமயம், அஸ்வெசும திட்டத்தினால் மக்களுக்கு கிடைக்கவுள்ள பயனும் கிடைக்காமல் போகும். அன்று 2015இல் மகிந்த ராஜபக்ச தேர்தலில் தோற்காவிட்டால் இன்று 100 பில்லியன் அமெரிக்க டொலர் வளர்ச்சியடைந்த பொருளாதாரம் உள்ள நாடாக இலங்கை அபிவிருத்தி அடைவது மாத்திரம் அல்ல அம்பாந்தோட்டை மாவட்டத்தை தெற்காசியாவில் சிறந்த பொருளாதார வலயமாக மாறியிருக்கும். துரதிஷ்டவசமாக அதனை செய்ய முடியாமல் போனது என குறிப்பிட்டுள்ளார்.

## ஊர்தி மீதான தாக்குதல் பெரும்பான்மையின மக்கள்....

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 36 ஆவது நினைவுவேந்தல் வாரத்தினை முன்னிட்டு பொத்துவிலில் இருந்து கடந்த 15ம் திகதி ஆரம்பமான திலீபனின் நினைவுகளை தாங்கிய ஊர்தியானது(18) திருகோணமலை வீதி வழியாக பயணித்த போது ஊர்தியை வழிமறித்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த குழுவினர் குறித்த ஊர்தி மீதும் அதில் பயணித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்நிலையில் பொலிஸார் முன்னிலையில் இடம்பெற்ற இச் சம்பவத்திற்கு பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

குறிப்பாக ஊர்தி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மீதான தாக்குதலுக்கு பெரும்பான்மையினத்தை சேர்ந்த பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

❛திருகோணமலையில் திலீபன் நினைவிடத்தை தாக்க அனுமதித்த போது கடமையை கடத்திய பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இனவாதத்தை குலைத்து ஆட்சியை தக்க வைக்க நினைக்கும் கட்சி தோற்கடிக்கப்பட வேண்டும். சிறுபான்மையினருக்கு குறிப்பிட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நாம் மறக்க முடியாது. இறந்த ஒருவரை நினைவு கூர்வது குற்றமில்லை.

ஒரு மனிதனின் மனித உரிமைகள் உடைக்கப்படும் போது, அவனுடைய நோக்கம், நடத்தை, அரசியலை பார்ப்பதற்கு முன் அந்த அநீதியை நம்மால் தடுக்க முடியவில்லை என்றால், நம் உரிமைகளை காக்கவோ, உயிரை மதிக்கவோ முடியாது❞ என பெரும்பாண்மையினத்தை சேர்ந்த பெண்ணொருவர் சமூக வலைத்தளத்தில் கருத்து தெரிவித்திருந்தார்.

அதேவேளை காலிமுகத்திடல் போராட்டகளத்தில் முக்கிய செயற்பாட்டாளராக திகழ்ந்த லஹிரு வீரசேகர குறிப்பிடுகையில்,

திலீபன் நினைவேந்தல் வாகனங்கள் அணிவகுத்து செல்லும் போது ஒரு குழுவினர் தடிகளால் தாக்கியுள்ளனர். பொலிஸார் எவ்வளவு அசமந்தமாக நடந்து கொண்டார்கள் என்பது தெளிவாக தெரிகிறது.

வாகனங்களை மட்டுமின்றி அங்கு வந்தவர்கள் மீதும் தலைக்கவசத்தால் அடிக்கிறார்கள். எனினும் யாரும் முறைப்பாடு செய்யவில்லை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிக்கிறார் என லஹிரு தெரிவித்துள்ளார்.

1983 இல் கறுப்பு ஜூலையின் போது, அரசாங்கம் மக்களை கொல்ல அனுமதித்து காத்திருந்தது. எனவே தமிழர் என்பதாலேயே தனி பிரச்சனை.

அது எதுவுமே இல்லாமல் மே 09 அன்று காலி முகத்திடல் மீது தாக்குதல் நடத்தியது சிங்கள பௌத்த குண்டர்கள்தான்.ஒவ்வொரு 9ம் திகதியும் காலி முகத்திடலுக்கு நாங்கள் சென்றது மக்கள் போராட்டத்தின் வீரர்களை நினைவுகூரவே. அதற்கு அனுமதி கிடைக்காததால் நாங்கள் எதிர்த்து போராடினோம்.

எனவே அந்த மக்களுக்கு திலீபன் ஒரு மாவீரன். உலகம் என்ன சொன்னாலும் தடியால் அடிபட்டு ஒரு மனிதன் இறந்தால் அதுதான் உண்மையாகும்.அந்த உண்மைக்காக நிற்க ஒத்துக் கொள்ளாதவர்கள் தங்களுக்கு தாங்களே குழி வெட்டிக் கொள்வார்கள் என லஹிரு வீரசேகர தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக பெரும்பான்மையினத்தை சேர்ந்த பலரும் குறித்த சம்பவத்திற்கு தமது கண்டனங்களை பதிவு செய்து வருவதுடன் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த பல்வேறு தரப்பினரும் குறித்த காடைத்தனமான தாக்குதல் சம்பவத்தை கண்டித்து வருகின்றனர்.

## தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால்

தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு குறித்த விடயம் தொடர்பில் தற்போதைக்கு முன்னெடுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி கால்நடை வளர்ப்பாளர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

இது தொடர்பில் வனவள பாதுகாப்பு திணைக்களத்தினால் சட்டாீதியற்ற முறையில் காடழிப்பு, விவசாய நடவடிக்கை போன்றவற்றில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்த பூரண தகவல் எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் கிடைக்கப்படும் எனவும் அரசாங்க அதிபரால் இதன்போது பதில் வழங்கப்பட்டுள்ளமையை பாராளுமன்ற உறுப்பினர் பண்ணையாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இவ்விடயம் தொடர்பில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஒன்றிணைந்து தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்வதாகவும், தாம் எப்போதும் கால்நடைப் பண்ணையாளர்களுடன் ஆதரவாக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தமது போராட்டத்தின் வடிவினை மாற்றி தொடர்ச்சியான உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதுடன் அதற்கும் தீர்வில்லையென்றால் சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுக்கப்போவதாக கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆளுந்தரப்பு அரசியல்வாதிகள் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாக்குகளினால் பாராளுமன்ற உறுப்பினர்களாக சென்றவர்கள் அவர்களுக்கு மாவட்ட மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான துணிவு இடுப்பில் இல்லாவிட்டால் தங்களது பதவிகளை இராஜினாமா செய்துவிட்டு தம்முடன் போராட வருமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

மட்டக்களப்பு சித்தாண்டி பாடசாலைக்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை காலை முதல் குறித்த போராட்டத்தில் பெரியமாதவணை, மயிலத்தமடு கால்நடை பண்ணையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

நேற்றைய தினம் தலையில் கறுப்பு துணியை அணிந்தவாறு போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஈடுபட்டனர்.

கிழக்கை மீட்க வந்தவர்களே எங்கே சென்றீர்கள்?, அரசே மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை வழங்கு, காணிக்கொள்ளையர்களே மேய்ச்சல்தரையினை விற்றுவிட்டீர்களா?,அரசே மகாவலி என்னும் போர்வையில் எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே,மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரே மேய்ச்சல் தரை பிரச்சினை விளங்கவில்லையா போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் பல்வேறு கோசங்களையும் எழுப்பினார்கள்.

தமது நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி கடந்த நான்கு தினங்களாக போராடி வருகின்றபோதிலும் இதுவரையில் தமது கோரிக்கையினை தீர்த்துவைப்பதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லையென பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த நான்கு தினங்களாக தமது வாழ்வாதாரத்தினை இழந்து இந்த போராட்டத்தினை முன்னெடுத்துவரும் நிலையில் மாவட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் தமது பிரச்சினைகளை தீர்த்துவைக்க எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லையெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் உள்ள அரசாங்கம் சார் இராஜாங்க அமைச்சர்கள் தமது பிரச்சினையை தீர்ப்பதற்கு இடுப்பில் பலம் இல்லாதவர்களாகவுள்ளதாகவும் அவர்கள் தமது பதவியை விலகி தங்களுடன் போராட

வருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தமது நியாயமான போராட்டம் கவனத்தில் கொள்ளப்படவில்லையாயின் தமது போராட்டத்தினை தொடர்ந்து கடுமையான போராட்டமாக முன்கொண்டுசெல்லவேண்டிய நிலையேற்படும் எனவும் முதல் கட்டமாக சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்படும்,அதுவும் கவனத்தில் கொள்ளப்படவில்லையென்றால் சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தினை நடாத்தவேண்டிய நிலையேற்படும் எனவும் இதன்போது கால்நடை பண்ணையாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# அடுத்து தேர்தலுக்கு குண்டு வெடிக்கும் பிள்ளையான் பதவிவிலக வேண்டும்

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இணைப்பாளர் வணபிதா மா.சக்தவேல் தெரிவிப்பு

(கனகராசா சரவணன் )

இலங்கையில் அடுத்த குண்டு வெடிக்கும் அது இந்துக்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே மோதலை ஏற்படுத்த ராஜபக்ஷ தரப்பினர் வைக்கபோகின்றனர். தந்தை செல்லா தமிழர்களை கடவுள்தான் காக்க வெண்;டும் என்று அந்த கடவுள் இப்போது உண்மையை சனல் 4 மூலம் வெளிப்படு;தியுள்ளது எனவே கிழக்கு முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் பதவிவிலக வேண்டும்; சுதந்திரமான விசாரணைக்கு இடம் கொடுக்க வேண்டும் அதுதான் ஒரு நீதியான செயலாக அமையும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இணைப்பாளர் வணபிதா மா.சக்தவேல் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள வோய் ஒப் மீடியா ஊடக வளநிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திலிபனின் 36 நினைவஞ்சலி வாரத்திலே இலங்கையின் அரசியல் நிலமை தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பு இவற்றுக்கு மத்தியில் சனல் 4 ஆவண திரைப்படம் கொண்டுவந்துள்ள செய்தி இன்று முழுநாட்டையும் அச்சத்தில் ஆச்சரியத்தில் வியப்பில் ஆத்தி இருக்கின்றதுடன் இந்த நாட்டை ஆளுகின்றவர்கள் கொலைகாரர் என்பதை மீண்டுமாக வலியுறுத்தியுள்ளது.

1971 தெற்கில் நடந்த கிளர்சியின் போது நூற்றுக்கணக்கான இளைஞர்கள் படுகொலை கொல்லப்பட்டனர் அப்போது இளம் பெண் மனம்பேரி நிர்வானமாக்கி வீதியில் இழுத்துச் செல்லப்பட்டது என கிளர்ச்சி வரலாறு கூறுகின்றது.

தெற்கில் 1988, 1989 ம் ஆண்டு நடந்த கிளர்ச்சியின் போது 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டனர். எனவே தங்களுடைய இனத்தை, மதத்தைச்சார்ந்தவர்களையே கொலை செய்கின்ற ஆட்சியாளர்கள் இப்போதும் ஆட்சி செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கான சான்றுதான் சனல் 4 வெளியிட்டுள்ள படம்.

2019 உயிர்த ஞாயிறு குண்டுவெடிப்பு தங்களுடைய ஆட்சியை மீண்டும் வலியுறுத்துவதற்காக இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி குளிர் காய்வதற்காகவும் தங்களை பாதுகாப்பதற்காகவும் கொலைகடிளை செய்துள்ளனர் இது பாரிய மக்கள் படுகொலை.

கொக்குதொடுவாய் மனித புதைகுழி வடகிழக்கிலே நடந்த படுகொலைகள் 2009 முள்ளிவாய்க்கால் இனபடுகொலை எல்லாம் தெற்கில் ஆட்சியாளர்களின் முகத்தை வெளிக்காட்டுகின்றது எனவே தங்களுடைய மக்களையே கொன்று குவித்தவர்கள் வடகிழக்கு மக்களை என்ன செய்திருப்பார்கள் என இன்று சர்வதேசம் சிந்திக்க வேண்டிய காலகட்டம் இது.

நாடாளமன்றத்தில் தெரிவுக்கழுவை அமைக்க போவதாக தெற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோருகின்றனர். அதே போன்று ஜனாதிபதி ஆணைக்குழு இதை விசாரிக்கும் என தெரிவிக்கின்றார்.

1948 ம் ஆண்டில் இருந்து பல்வேறு விதமான ஆணைக்குழுக்களை அமைத்திருக்கின்றன இந்த ஆணைக்குழுக்கள் கொடுத்த அறிக்கைகள் ஒன்றும் நடைமுறைப்படுத்தவில்லை அது கிடைப்பிலே போட்டது தான் வரலாறு.

எனவே ஜனாதிபதி ஆணைக்குழுவாக இருந்தால் என்ன நாடாளுமன்ற தெரிவுக்குழுவாக இருந்தால் என்ன இவை எல்லாம் உண்மையை மறைப்பதற்காக கிடைப்பிலே போடுவதற்காக குழிதோண்டி புதைப்பதற்கா அமைக்கப்படுவது ஒன்று எனவே இந்த விசாரணையில் மக்களுக்கு நம்பிக்கை கிடையாது.



அரசாங்கம் மீது பாரிய குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது இதற்கு முதலில் பாராளுமன்றத்தை கலைத்து அத்தனைபேரும் அதிகாரமற்ற நிலைக்கு செல்ல வேண்டும் அதேநேரம் எதிர் கட்சியில் நிற்பவர்கள் இதனை பாவித்து ஆட்சிக்கு வந்தாலும் கொலையாளிகளை அவர்களும் பாதுகாத்தான் போகின்றார்கள்.

இந்த கொலைகளை வைத்து அவர்கள் ஆட்சி நடாத்தத்தான் போகின்றார்கள் அவர்களிடம் இருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது காரணம் அவர்களும் சேர்ந்து தான் வடகிழக்கிலே இனழிப்பிற்கு இன படுகொலைகளுக்கு காரணமாக இருக்கின்றனர் எனவே சர்வதேச விசாரணை வேண்டும் என கேட்கின்றோம்.

2009 ம் ஆண்டில் இருந்து தமிழ் மக்களின் இனழிப்புக்கும் படுகொலைக்கும் நீதிகேட்டு நாங்கள் வீதியில் நிற்கின்றோம் மனித உரிமை பேரவைக்கு வருடா வருடம் சென்று வலியுறுத்துகின்றோம் ஆனால் அங்கும் எங்களுக்கு நீதி கொடுப்பார்களா என்ற சந்தேகம் இருக்கின்றது.

தெற்கில் இருக்கின்ற பாராளுமன்ற எதிரணியினர் அதேபோல அரச தரப்பில் இருக்கின்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச விசாரணை வேண்டும் என 2009 ம் ஆண்டில் இருந்து தமிழ் மக்கள் கேட்ட சர்வதேச விசாரண இப்போது அது நீதியானது என உறுதிப்படுத்தியுள்ளது.

அதே இனப்படு கொலையாளிகள் யுத்த குற்றவாளிகள் அதே இராணுவம் சேர்ந்து 2019 ம் ஆண்டு இந்த குண்டுதாக்குதலை செய்துள்ளது என செய்தி வெளிவந்துள்ளதுடன் குண்டுவெடிப்பு நிகழப் போவது என இந்தியா ஏப்பிரல் முதல் வாத்திலும்; குண்டுவெடிப்பு நிகழ்ந் அன்றும் அராங்கத்திற்கு அறிவுறுத்தியுள்ளனர் எனவே இந்த குண்டுவெடிப்பை யார் செய்தனர் என்ன நோக்கத்திற்காக செய்தனர் என இந்திய உளவு பிரிவுக்கு நிச்சயமாக தெரியும்.

எனவே இதற்கு பின்னால் பாரிய அரசியல் பின்னி இருக்கின்றது மகிந்த கேட்ட தற்செயலாக ஆட்சி பீடத்திற்கு வந்தாலும் அவர்களுக்கு எதிராக மக்கள் குரல் எழும்ப வேண்டும் என்ற நீண்டகால நோக்கம் இந்த குண்டுவெடிப்பிற்கு பின்னால் இருந்திருக்கின்றது. சீன சார்புடைய இவர்கள் ஆட்சி பீடத்தை இருக்க கூடாது என் மேற்கு உலக அரசியல் இருந்திருக்கின்றது இந்திய புலனாய்வு பிரிவினர் மறை முகமாக அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் எனவே அவர்கள் உண்மையை மறைத்திருக்கின்றார்கள்.

இப்போது இலங்கையை ஆளப் போவது யார் அடுத்த தேர்தல் வரும் போது மீண்டுமாக ராஜபக்ஷ தரப்பினர் குண்டை வெடிக்க வைக்கப் போகின்றார்கள் அது வடகிழக்கு பகுதியிலே தொடர்சியாக காவி உடைதரித்த சிங்கள பௌத்த தேரர்கள் களத்தில் இருக்கின்றனர் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையே மோதலை உருவாக்குகின்றதற்காக அடுத்து குண்டாக இருக்கலாம்.

எனவே தெற்கு மக்களிடம் கேட்கின்றோம் வடகிழக்கு மக்களின் குரலுக்கு செவிமடுங்கள் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள் சர்வதேச நீதி விசாரணைக்கு ஆதரவு தாருங்கள் இல்லை என்றால் மீண்டும் உங்களை ஆளப் போவது கொலையாளிகள் எனவே சர்வதேச விசாரனை வேண்டும் அப்படி செய்தால் மாத்திரமே வடகிழக்கு மக்களுக்கும் தெற்கில் இருக்கின்ற நீதிகேட்கும் மக்களுக்கும் நீதிகிடைக்கும்

வடகிழக்கில் நடந்த போராட்டத்தை காட்டிக் கொத்தவர்களின் பெயர்கள்தான் சனல் 4 ஆவணம் குற்றவாளிகளாக்கியுள்ளது. வடகிழக்கு அரசியலுக்காக தேசத்தையும் தேசியத்தையும் காக்கவேண்டும் என்பதற்காக ஆயிரக்கனக்கானோரையும் நாங்கள் இழந்திருக்கின்றோம் இந்த இழப்பிற்கு கிழக்;கின் முன்னால் முதலமைச்சரும் முன்னாள் பிரதி அமைச்சர் கருணாவும் காரணம்.

அவர்கள் தங்களின் பாதுகாப்பிற்காக மகிந்த ராஜபக்ஷவின் கைக்கூலியாக செயற்பட்டிருக்கின்றனர் இவர்களின் பாதுகாப்பிற்காகவும் அதிகாரத்திற்காகவும் இவர்கள் கொலைகளுக்கு அஞ்சாதவர்கள் கொலைகளை செய்திருக்கின்றார்கள் என கிழக்கில் நடந்த பல்வேறு சம்பவங்கள் வெளிகொண்டுள்ளது.

கடத்தியிருக்கின்றனர் கொலை செய்துள்ளனர் காணிகளை கொள்ளை யடித்துள்ளனர் தெற்கின் ஆட்சி கொலையாளிகளின் கையில் சென்றதை போன்று கிழக்கின் நிர்வாம் கூட அவர்களுக்கு சார்பானவர்கள் அதேவேலை செய்கின்றவர் கையில் நிற்கின்றது எனவே சனல் 4 ஆவணம் வெளிப்படுத்தியுள்ளது

இந்த குற்றச்சாட்டு நிருபிக்கப்பட வேண்டும் அதற்கு பூரண ஒத்துழைப்புவழங்கும் முகமாக முன்னதாக சுயமாகவே பிள்ளையான் பதவியில் இருந்து விலக வேண்டும் சுதந்திரமான விசாரணைக்கு இடம்கொடுக்க வேண்டும் அதுதான் ஒரு நீதியான செயலாக அமையும்

அதற்கு இடம்கொடுக்காவிட்டால் இந்த அரசாங்கத்தின் கீழ் மகிந்த கோட்டபாய காப்பாற்றுவார்கள் என நினைத்தால் அவர்களும் முன்னால் முதலமைச்சரை கைவிடுவார்கள். அவர்கள் தங்களுடைய பாதுகாப்பிற்காக எதிர்காலத்திற்காக தமது இனம் சமயம் சார்ந்து அவர்கள் இவர்களை கைவிடுவார்கள்.

எனவே இந்த உண்மை இலங்கை தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தும் அதற்கான நீதியை சர்வதேசம் நிலைநாட்ட வேண்டும் பிள்ளையான் தனது பதவி விலகல் கடிதத்தை உடனடியாக கொடுக்க வேண்டும் என்றார்.

# மலேசியன் யுனிவேர்ஸல் கல்லூரியின் 10 வது ஆண்டு நிகழ்வும் வருடாந்த பட்டமளிப்பும்







(சில்மியா யூசுப்)

மலேசியன் யுனிவேர்ஸல் கல்லூரியின் 10 வது ஆண்டு நிகழ்வும் வருடாந்த பட்டமளிப்பு விழாவும் 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் திகதி காலை 9.30 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மலேசியன் யுனிவேர்ஸல் கல்லூரியின் பணிப்பாளர்களான திருமதி சப்ரினா பாரிஸ் ,பஸ்லான் முஹம்மட், மற்றும் உதவி பணிப்பாளர் சகீகா பாரிஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக ஹாசிம் உமர் ஏனைய பிரதி நிதிகளாக முன்பள்ளி பாடசாலை பணிப்பாளர் மஹிந்த கொடிதுவகு, மூன்றாம் கல்வி நிலை உதவி பணிப்பாளர் சமன் விக்ரமசிங்க, தினகரன் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் செந்தில்வேலவர் மற்றும் IELTES பயிற்சியாளர் வசீம் லதீப் ,மற்றும் ஏனைய பிரதிநிதிகள் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இப் பட்டமளிப்பு விழாவில் 50 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்லோமா சான்றிதழ்களும்,10 ஆங்கில டிப்லோமா பாடநெறி சான்றிதழ்களும் ,5 மாணவர்களுக்கு உயர் சான்றிதழ் பட்டமும் வழங்கி கொளரவிக்கப்பட்டன.

# உலக தற்கோலை தினத்தினை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறப்பு நிகழ்வுகள்!









( வி.ரி.சகாதேவராஜா)

உலக தற்கொலை தினத்தினை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் ஒருவார கால சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 11ஆம் திகதி உலக தற்கொலை தினமாகும்.

அதனையொட்டி கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரன் சிறப்பு நிகழ்வுகள் தலைமையில் இடம் பெற்று வருகின்றன.

இந்நிகழ்வில் உளவியலாளர் திருமதி சம்ருத் ஷெரிப்டின் ( க்டு), வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணர் டாக்டர்.ஏஜிஎம். ஜுராச் , வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஜே.மதன் மற்றும் வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள் ,உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தாதிய பொறுப்பு உத்தியோகத்தர. க. அழகரெட்னத்தின் வரவேற்புரையை தொடர்ந்து வைத்தியசாலையின் பணிப்பாளரினா தலைமை உரை நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து உளவியலாளரின் தற்கொலை தடுப்பு தொடர்பான விரிவுரை மற்றும்,வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணரின் தற்கொலை தடுப்பு தொடர்பான விளக்ககாட்சிப்படுத்தல் மற்றும் மனநல பிரிவின் சிரேஷ்ட வைத்தியர் டாக்டர் யூ.எல். சராப்டீனின் தற்கொலை தடுப்பு தொடர்பான விரிவுரைகள் இடம் பெற்றன.

# தியாகி திலீபன் சாகவில்லை அவரை இந்திய அகிம்சையும் இலங்கை பௌத்தமும் கொலை செய்தது

## மனித உரிமை செயற்பாட்டாளரான வணபிதா மா.சத்திவேல்

(கனகராசா சரவணன்)

தியாகி திலீபன் சாகவில்லை அவர் கொலை செய்யப்பட்டார் இந்தியாவின் அகிம்சையும் இலங்கை தேசத்தின் சிங்கள பௌத்தமும் அவரை கொலை செய்துள்ளது எனவே குற்றவாளிகள் சர்வதேச குற்றியல் நீதிமன்றத்தின் கூண்டின் முன் நிறுத்தி தண்டிக்கப்படும் வரையும் இந்த தேசம் எங்கள் இலச்சியம். அரசியல் வெல்லும் வரை திலீன் சாட்சியாக நாங்கள் போராடுவோம் எமது போராட்டம் தொடரும் என மனித உரிமை செயற்பாட்டாளரான வணபிதா மா. சத்திவேல் தெரிவித்தார்.



தமிழ் தேசிய மக்கள் முன்னணி தியாகதீபம் திலீபனின் 36 ஆண்டு நினைவேந்தலை யிட்டு பொத்துவில் இருந்து யாழ் நோக்கிய தீலிபனின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தியை நேற்று வெள்ளிக்கிழமை (15) மாலை பொத்துவில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது வணபிதா சத்திவேல் இவ்வாறு தெரிவித்தார்.

தியாகி திலீபனுடைய 36 வது நினைவு நாளில் சுடர் ஏற்றுகின்றோம் இந்த சுடர் தாயகத்தின் அரசியல் இலட்சியத்தின் சுடர் அன்று திலீபன் என கோரிக்கைகளை முன்வைத்தாரே அந்த கேரிக்கைகளை இன்றும் நாம் அதற்காக போராடிக் கொண்டிருக்கின்றோம் அந்த போராட்டம் வெற்றி பெறும்வரையில் பயணத்தை தொடருவோம் அவரின் பாடத்தில் சத்தியம் செய்கின்றோம்

எங்களை ஏமாற்றுகின்ற ஆட்சியாளர்கள் தொடர்ந்து எங்களை ஏமாற்றுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றனர் தியாகி திலீபன் சாகவில்லை அவர் கொலை செய்யப்பட்டார் இந்தியாவின் அகிம்சையும் இலங்கை தேசத்தின் சிங்கள பௌத்தமும் அவரை கொலை செய்துள்ளது சிங்கள பௌத்தம் கொலை செய்யும் அழிக்கும் என்பதற்கு அடையாளமாகத்தான் தியாகி திலீபன் இருக்கின்றார்.

இந்த நாடு அழிவுகளுக்கு மத்தியிலே தான் இவர்கள் மகிழ்சியை காண்கின்றனர்கள் தங்களுடைய இனத்தையே அழிப்பவர்கள் 2019 உயித்த ஞாயிறு குண்டுவெடிப்பு தெற்கிலே பாரிய வெடிப்பாக வெளிப்பட்டுள்ளது இந்த வெடிப்பிற்கு காரணமாணவர்கள் மகிந்த கோதபாய மட்டுமல்ல இந்தியாவும் பதில் சொல்லவேண்டும்.

2009 ம் ஆண்டு முள்ளிவாய்காலில் ஒரு இலச்சத்துக்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டவர்களை இந்தியாவும் சர்வதேசம் பாத்துக் கொண்டது அவ்வாறு பார்த்துக் கொண்டதன் காரணமாகத்தான் 2019 ம் ஆண்டு இந்த குண்டுவெடிப்பு நடந்தது அவர்;களுடைய அரசியலுக்காக அரசியல் தேவைகளுக்காக இந்த நாட்டில் ஏழைகளை கொள்ளுவதற்காக ஆயத்தமாக இருக்கின்றனர்.

எனவே சர்வதேசத்தை பார்த்து கேட்கின்றோம் எங்களுக்கு நீதிவேண்டும் அது சர்வதேச தவையீட்டின் மூலம் ஏற்படுகின்ற நீதியாக இருக்கவேண்டும் இந்த நாட்டில் எங்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை இப்போது உண்மையான குற்றவாளிகள் யார் என்பது வெளிப்பட்டிருக்கின்றது.

நாங்கள் 14 வருடங்களாக சர்வதேச விசாரணை வேண்டும் என கேட்டுக் கொண்டிருக்கின்றோம் இதற்கு செவிமடுக்காக தென்னிலங்கை அரசியல் வாதிகள் இப்போது சர்வதேச விசாரணை வேண்டும் என்கின்றனர். எனவே இது தான் நீதி இது தான் மனுநீதி இது தான் இறைநீதி எந்த மக்கள் சர்வதேச விசாரணை வேண்டாம் என கோரினார்களே அவர்களின் வாயாலே இப்போது சர்வதேச விசாரணை வேண்டும் என்றால் இப்போது அவர்கள் பக்கம் திரும்பியிருக்கின்றது எனவே குற்றவாளிகள் சர்வதேச குற்றியல் நீதிமன்றத்தின் கூண்டின் முன் நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டும் அது வரை எமது போராட்டம் தொடரும்.

# சாய்ந்தமருதில் கடலரிப்புக்கு நடவடிக்கை எடுக்க கோரி கடற்கரை வீதியை மறித்து மீனவர்கள் ஆர்ப்பாட்டம்





(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்ற கடலரிப்பிற்கு தீர்வு காணுமாறு சாய்ந்தமருது மீனவர்கள் வீதியை மறித்து போராட்டம் ஒன்றினை (18)மேற்கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் காலநிலை மாற்றம் காரணமான கடும் கடலரிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றன.

இதில் சாய்ந்தமருது பகுதி கடற்கரை பகுதி பெரும்பாலும் கடலரிப்பு அதிகமாக இடம்பெற்று வருவதுடன் மீனவர்களும் பல்வேறு சிரமங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இந்த கடலரிப்பு காரணமாக மீனவர்களின் ஓய்வு அறைகள் வாடிகள் பள்ளிவாசல்கள் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அத்துடன் மீனவர்களின் தோணிகள் வலைகள் கடலரிப்பினால் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டுள்ளன.

மேலும் குறித்த கடலரிப்பினை தடுப்பதற்காக கரையோரம் பேணல் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைககளை மேற்கொண்டுள்ளதுடன் பாரிய கற்களும் வெளியிடங்களில் இருந்து கனரக வாகனங்களின் உதவியுடன் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆனால் இக்கற்கள் தமது மீன்பிடி தொழிலை பாதிப்புறும் வகையில் போடப்பட்டுள்ளதாகவும் கற்களில் மோதி தமது தோணிகள் உடைந்துள்ளதாகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் குறித்த போராட்டத்தை சாய்ந்தமருது பொலிஸார் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தள்ளதுடன் மீனவர்களுடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டனர்.

# தாராபுரத்தில் புதிய அதிபர் நியமனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம்





( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தாராபுரம் பாடசாலைக்கு புதிய அதிபர் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பெற்றோர் அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். காலாவதியான தாராபுரம் பகுதி நிர்வாகங்கள் தான்தோன்றித் தனமாக செய்ல்பட்டு வருவதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டது.

மன்னார் தாராபுரம் அல் மினா மகா வித்தியாலயத்துக்கு நீண்ட நாட்களுக்குப் பின் திங்கள் கிழமை (18) புதிய அதிபர் நியமிக்கப்பட்டு அவர் (18) தனது பணி பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இந்த புதிய அதிபர் தங்கள் பாடசாலைக்கு பொருத்தமானவர் அல்ல எனது தெரிவித்து சில பெற்றோர்கள் திங்கள் கிழமை (18) காலை ஒரு சில மணி நேரம் பாடசாலைக்கு முன்பாக பதாதைகள் ஏந்திய வண்ணம் அமைதி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆண் பெண் இருபாலாரும் கலந்து கொண்ட இவர்கள் தாங்கள் ஏந்தியிருந்த பதாதைகளில் 'வராததே வராததே பெற்றோர்கள் வெறுக்கும் அதிபரே வராதே' 'புதிய அதிபரே உன்னை எடுத்தவரே உன்னை உதைப்பார்கள்' 'குளத்தடி கோமாளிகளே எம் விதியை தீர்மானிப்பது நீயா?' எங்கள் ஊர் அதிபர் எமக்கு வேண்டும்' 'ஏழை மாணவர்களின் கல்வியை அழிக்காதே' போன்ற வாசகங்கள் அவர்கள் ஏந்தியிருந்த பதாதைகளில் காணப்பட்டன.

இது தொடர்பாக இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில் கடந்த பத்து வருடங்களாக இப்பாடசாலையில் கல்வி மிகவும் பின்தங்கி காணப்படுகின்றது. இதற்கு காரணம் சரியான தலைமைத்துவம் கொண்ட அதிபரோ அல்லது பிரதி அதிபரோ இப்பாடசாலைக்கு நியமிக்கப்படவில்லை. இதன் காரணமாக இங்கு நன்றாக படிக்கும் பிள்ளைகள் இப்பாடசாலையை விட்டு விலகி மன்னார் நகர் பாடசாலையை நோக்கிச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

இங்குள்ள மாணவர்கள் சாதாரண தரம் மற்றும் உயர் அடைவுக்குச் செல்லும் போது இவர்களின் தராதரம் குறைவடைந்துச் செல்லுகின்றன.

எங்கள் ஊரில் காலாவதியான சமூக அமைப்புக்கள் அதாவது பாடசாலை அபிவிருத்திக் குழு . பழைய மாணவர் அமைப்பு பள்ளி நிர்வாகமாக இருக்கலாம் இவர்கள் தொடர்ந்து இயங்கி வருவதால் தாங்கள் தான்தோனிறி தனமாக இருந்து செயல்படுவதாலேயே இந்நிலை எற்பட்டுள்ளது என தெரிவித்தனர்.

# வரலாற்றில் இரட்டைச் சாதனை புரிந்த மாணவி றியோன்சியா! அடிப்படை வசதிகளற்ற றொட்டைக்கிராமத்தின் முதல் 3ஏ பெற்ற சாதனை மாணவி

(வி.ரி.சகாதேவராஜா)

எந்த அடிப்படை வசதிகளுமற்ற மிகவும் பின்தங்கிய பொத்துவில் றொட்டைக் கிராம வரலாற்றின் முதல் தடவையாக 3 ஏ சித்தி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறார் செல்வி சாந்தலிங்கம் றியோன்சியா என்ற மாணவி.

அதுமட்டுமின்றி பொத்துவில் தமிழ் மகா வித்தியாலய வரலாற்றில் முதல் 3 ஏ பெற்ற முதல் மாணவியும் இவரே.

ஆகவே மாணவி சாந்தலிங்கம் றியோன்சியா இரட்டை வரலாற்று சாதனை படைத்திருக்கிறார்.

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள றொட்டைக் கிராமம் அடிப்படை வசதிகளற்ற பின் தங்கிய குக் கிராமமாகும்.அங்கு சுமார் 78 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

அங்கிருந்து சுமார் 7 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பொத்துவில் தமிழ் மகாவித்தியாலயத்திற்கு மாணவர்கள் சென்று கற்பது வழக்கம்.

றொட்டைக் கிராமத்திலிருந்து சுமார் 20 மாணவர்கள் பிரதான வீதி வரை இரண்டு கிலோ மீட்டர் கால்நடையாக நடந்து சென்று பின்னர் பொத்துவிலுக்கு ஐந்து கிலோ மீட்டர் பஸ்ஸில் பயணிப்பது வழமை.



றொட்டையைச் சேர்ந்த சாந்தலிங்கம் கிருஷ்ணகுமாரி தம்பதிகளின் மூன்றாவது புதல்வி ரியோன்சியா. இம் மாணவி காலையில் வீட்டிலிருந்து நடந்து பிரதான வீதியை அடைந்து பின் பேரூந்தினூடாக பாடசாலையை அடைவதும் மீண்டும் பேரூந்தினூடாக பிரதான வீதி அடைந்து மீண்டும் நடந்து வீட்டை அடையும் போது 2.30 மணியாகி விடும். சிலவேளைகளில் பிரத்தியேக வகுப்பிற்காகபொத்துவிலில் கழித்தால் வீடு வரும் போது நேரம் 6.30 மணியாகி விடும். சில நேரங்களில் யானைகளின் ஆபத்தும் இருக்கும் .

இது ஒரு நாள் செயற்பாடு இல்லை 3வருட செயற்பாடு. இவர் இனிமேல் இப்பிராந்தியத்திற்கு ஒரு முன்னுதாரணமாக திகழ்வார்.

தந்தையார் சாந்தலிங்கம். ஒரு மீனவராக இருக்கின்றார் .ஒரு வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த அவர் வரலாற்று இரட்டை சாதனையை புரிந்து இருக்கின்றார்.

சாதனை மாணவி சாந்தலிங்கம் றியோன்சியாவிடம் கேட்ட பொழுது .

''எனது ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை பொத்துவில் தமிழ் மகாவித்தியாலயத்தில் பயின்றேன் .நான் புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளை பெற்றேன். சித்தி அடையவில்லை. சாதாரண தர பரீட்சையில் 5ச் 2ஞ 1 சி 1எஸ் பெற்றேன்.

உயர்தரத்தில் கலை பிரிவில் பயின்றேன். தமிழ், விவசாயம், புவியியல் பாடங்கள் படித்தேன்.

நான் எதிர்பார்த்த மூன்று ஏ சித்திகள் கிடைக்கப்பெற்றது. மாவட்டத்தில் 25வது நிலை.1.9 இசட் புள்ளி கிடைக்கப்பெற்றது. எனது லட்சியம் விவசாயத் துறையில் ஒரு நிபுணராக வருவது என்றார்.

எத்தனை வசதியீனங்கள் சவால்கள் வந்தாலும் படிப்பை ஒருபோதும் கைவிடக் கூடாது என்றார்.

அவரைப் பலரும் பாராட்டி வருகின்றனர்.

# வட மாகாண விளையாட்டு விழாவில் மன்னார் பறப்பங்கண்டல் மாணவி குறூஸ் பிறின்டா புதிய சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடமாகாண விளையாட்டுப் போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போது 100 மீற்றர் மீட்டர் ஓட்ட நிகழ்வில் புதிய சாதனை உருவாக்கியுள்ளார்

வட மாகாண தடகள விளையாட்டு விழாவில் வரலாற்று சாதனையை மன்னார் பறப்பாங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த டனிஸ் நிசாந்தன் குரூஸ் பிறின்ரா குரூஸ் என்ற மாணவி படைத்துள்ளார்.

12வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டதுடன் 100 மீற்றர் ஓட்ட நிகழ்வில் 14.60 செக்கன்கள் ஓடி முதலாம் இடத்தைப் பெற்று புதிய சாதனையாக நிலை நாட்டியுள்ளார்.



# நவீன தமிழ் இலக்கியத்தின் தோற்றமும் அதன் போக்கும்

உலகில் சமூக, அரசியல், பொருளாதார, சமய, கலாசார, விஞ்ஞான கட்டமைப்பில் நவீனம் என்ற பதம் பரந்து விரிந்த அடிப்படையில் கருத்தாடலுக்கு உட்பட்டு நோக்கப்படுகிறது. அளவு ரீதியிலன்றிப் பண்பு ரீதியில் இப்பதம் பல துறைகளில் பல சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. இன்றைய சமூகம் மாற்றத்தை விரும்புகிறது. மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்பதற்கிணங்க யாவும் கடந்து போகும் என்ற உண்மையையும் உணர்ந்திருக்கிறது. புதியனவற்றை ஏற்றுக் கொள்வது பழையனவற்றை முற்றாக நிராகரிப்பதற்குமல்ல என்பதையும் சமூகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அவற்றிலும் புதுமையைக் காண முயற்சிக்கிறது. இதனாலேயே நன்னூலாரும் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என வலியுறுத்தியுள்ளார். இந்த வகையில் தமிழ் இலக்கியப் பரப்பில் நவீனத்துவம் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வளர்ந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

நவீனம் என்ற சொல் பரந்த அடிப்படையில் பண்பு சார்பில் புதுமை, நவீனத்துவம், மறுமலர்ச்சி என்றவாறெல்லாம் பிரயொகிக்கப்படுகின்றன. Modernity என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ் சொல்லே நவீனத்துவம் என்பதாகின்றது. ஆங்கிலத்தில் இது Modern என்ற சொல்லடியாகப் பிறந்து Modern என்பதற்குத் தற்காலத்துக்குரியது, புதியது என்ற பொருளும் உள்ளன. அவ்வகையில் நவீனத்துவம் என்பதை வழிவழி வந்த மரபில் இருந்து மாறுபட்டுப் புதுமை சார்ந்து நிற்றல் அல்லது புதுமையை நாடிச் செல்லல் என வரையறுக்கலாம். இவ்வகையில் நவீனத்துவம் என்பது சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு அம்சங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கும் ஒரு வளர்ச்சிப் போக்கினைக் காட்டுகிறது. இவ்வளர்ச்சி ஐரோப்பாவில் மானிய முறைச் சமூக அமைப்பு வீழ்ச்சியடைந்து 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்த மறுமலர்ச்சியுடன் தோற்றம் பெற்றதெனலாம்.

முதலாளித்துவ தனியுடைமையின் தோற்றம் மறுமலர்ச்சியின் ஒவ்வொரு பரிமாணங்களிலும் வியாபித்தது. முதலாளித்துவ சமூக அமைப்பு மறுமலர்ச்சியை அல்லது நவீனத்துவத்தை ஊக்குவித்ததோடு அவற்றைப் பேணி வளர்த்தும் வந்தன. இத்தகைய சமூக மாற்றமும் அதனால் ஏற்பட்ட நவீனத்துவமும் இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து தோற்றம் பெற ஆரம்பித்தன.

ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி புதுமையை நாடியது. பாமர மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது. உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டியது. மக்களின் துக்கம், துயரம், இன்பம், அடிமை விடுதலை, மானுட நேயம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கவி பாடும் நவீன கவிஞர்கள் தோற்றம் பெற்றனர். இறைவனையும் அரசனையும் பற்றிக் கவி பாடிய கவிஞர்கள் மத்தியில் புதுமைக் கவிஞர்கள் வரவேற்கப்பட்டார்கள். அவர்கள் எங்கும் எதிலும் புதுமையை நாடி நின்றனர். கனதி, உருவம், உள்ளடக்கம், உத்தி என்பவற்றில் புதிய பரிசோதனைகளைச் செய்து கவி இயற்றினர். அரச சபைக் கவிஞன் மறுமலர்ச்சிக் காலத்தில் மக்கள் கவிஞனானான். இத்தகைய கவிஞர்கள் பலர் ஐரோப்பய நாடுகள் பலவற்றில் தோற்றம் பெற்றனர். இத்தாலியில் இருந்து தாந்தே, பெற்றாக், பொக்காசியோ, மாக்கியவலி போன்றோரும் இங்கிலாந்தில் இருந்து சேர். தோமஸ் மூவர், பிரான்சிஸ் பேக்கன், வில்லியமஸ் சேக்ஸ்பியர், ஸ்பென்சர், பென் யோன்சன், மில்டன், கொலட் ஆகியோரும் பிரான்சில் இருந்து இராஸ் மசூன், மாலியர், ராபிலே மான்மெய்ன் போன்றோரும் மறுமலர்ச்சிக் கால நவீன கவிஞர்களாக மதிக்கப்பட்டனர்.

மறுமலர்ச்சி மக்களின் அடிப்படை வாழ்க்கையில் தாக்கம் செலுத்தியது. மொழி, கலை, கலாசாரம், இலக்கியம் ஆகியவற்றோடு கலந்து கவிதைகள் புதிய பரிமாணத்தில் அமைந்திருந்தமையால் ஆரம்பத்தில் எல்லா மக்களையும் கவர்ந்தது என்பதில் வியப்பொன்றுமில்லை. மானிய முறை நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பில் இருந்தும் அடிமை வாழ்க்கையில் இருந்தும் விடுபட்டு முதலாளித்துவ சமூக அமைப்புக்குள் காலடி எடுத்து வைத்தவர்களுக்கு இத்தகை மாற்றம் வியப்பை அளித்தது. நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பில் இருந்து முதலாளித்துவ சமூக அமைப்பு தோற்றம் பெற்றபோது, அது தன் வளர்ச்சிக்கு உதவும் வகையில் சமூக, சமய, அரசியல், பண்பாடு சார்ந்த நிறுவனங்களை மாற்றி அமைக்க வேண்டிய தேவையையும் தோற்றுவிக்கின்றது. இந்த மாற்றம் பாரம்பரிய நிலப் பிரபுத்துவ நிறுவனங்களின் அமைப்பில் இருந்து பெரிதும் வேறுபட்டதாகும். இந்த வேறுபாடே புதுமை அல்லது நவீனத்துவம் எனப்படுகின்றது.

மத நிறுவனங்களுக்கும், மதம்சார மூடநம்பிக்கைகளுக்கும் எதிரான விஞ்ஞானபூர்வ மனப்பாங்கு, தனிமனித சுதந்திரம், அரசியலில் ஜனநாயகக் கோட்பாடு, மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கான புரட்சிகள், மக்களிடையே சமத்துவம், பெண்களுக்குச் சம உரிமை, கலை, இலக்கியத்தில் சமயச் சார்பின்மை, புதிய கலை, இலக்கிய வடிவங்களின் தோற்றம் ஆகியன முதலாளித்துவ சமூக அமைப்பு உருவாக்கிய நவீனத்துவம் சார்ந்த கவிதைகள் தோன்றியமைக்கான அடிப்படைகளாகும்.

மறுமலர்ச்சிக்குப் பின்னர் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியும் மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாடுகளுக்குள்ளே நடைபெற்ற புரட்சிகளும் நவீன இலக்கியத்தின் வளர்ச்சிக்கு உரம் ஊட்டின. பிரேஞ்சிப் புரட்சியின் விளைவாகப் பிரான்சு நாட்டில் புரட்சிகரமான போக்கைக் கொண்ட ஒரு புதிய

## மீள் பார்வை



சமூதாயம் தோன்றியது. அச்சமூகத்தில் தோன்றிய பல சிந்தனைகளைப் பாக்களாகப் பாடுவதற்கு முயன்ற பாத்தலோ(Baudelarre), ரிம்போ(Rimbaud), மல்லாமே(Mallarme) போன்ற புரட்சிக் கவிஞர்கள் பழைய மரபுகளை அடியோடு விட்டொதுக்கி யாப்பு விடுதலை பெற்ற புதிய கவிதைகளைப் பாட முற்பட்டனர். அப்பாடல்கள் Verse Libre எனப் பெயர் பெற்றன. அவற்றை அங்கிலத்தில் Free Verse என அழைத்தனர். இத்தகைய கவிதைப் போக்கு சம காலத்தில் பல நாடுகளிலும் பரிணமித்தன. அப்புதிய போக்கினைப் பின்பற்றி 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் வாழ்ந்த ஆங்கிலக் கவிஞர் வால்ட விட்மன் வசனங்களை வெட்டிக் கட்டி வனப்புமிக்க வசன கவிதைகளாக்கினார்.

வால்ட விடமனின் வனப்புமிக்க கவிதை அமைப்பு அமெரிக்காவோடு மாத்திரம் நின்றுவிடாது கடல் கடந்து வந்து இந்திய வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் மனதில் பட்டுப் புது வடிவம் பெற்றது. தாகூர் யாப்பிலக்கணத்தோடு கவி பாடும் திறன் பெற்றவராயினும் தமது புகழ் பெற்ற கவிதைப் படைப்பாகிய கீதாஞ்சலியை இலக்கண வரம்பு மீறிய புதுமைக் கவிதையாகவே படைத்தார்.

தமிழ் நாட்டில் நவீன கவிதைப் போக்கில் பல ஆய்வுகளைச் செய்து பார்தவர் பாரதியார் ஆவார். அவர் வங்கக் கவியின் கீதாஞ்சலியையும் வால்ட் விட்மனின் Leaves of Grass என்ற நூலையும் படித்துக் களித்து அதே போக்கில் 'காட்சிகள்' என்ற இலக்கணம் மீறிய புதிய கவிதைப் படைப்பை உருவாக்கித் தமிழ் இலக்கிய வரலாற்றிலே முதன் முதலாகப் புதுக் கவிதையின் தோற்றத்துக்கு வழி கோலினார். தமிழில் அமைந்த புதுக் கவிதையின் தந்தை மகாகவி பாரதியே ஆவார். என எம்.ஆர்.அடைக்கலசாமி(1994, பக்.311) தனது தமிழ் இலக்கிய வரலாறு எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

நவீனத்துவத்தின் பண்புகளான புதிய உள்ளடக்கம், வடிவப் பரிசோதனை, எளிமையாக்கம் போன்ற அம்சங்களைப் பாரதியின் கவித்துவத்தில் காண்கிறோம். தமிழ் நாட்டில் பாரதியின் இத்தகைய போக்குப் பாரதிதாசன், கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, ச.து.சு. யோகியார், பிச்சமூர்த்தி, கு,ப.ரா, புதுமைப்பித்தன், நாமக்கல் ராமலிங்கம்பிள்ளை ஆகியோரினால் வளர்க்கப்பட்டு இடைக்காலத்தில் தேக்கநிலை அடைந்தது.

ஈழத்தில் இத்தகைய போக்கு பாரதியின் சம காலத்தவர்களான பாவலர் துரையப்பாபிள்ளை, சோமசுந்தரப் புலவர், விபுலாநந்த அடிகள் ஆகியோரில் ஓரளவு தடம் பதிக்கப்பட்டிருந்தாலும் இவர்களை ஈழத்து நவீன கவிதைகளின் முன்னோடிகள் எனக் கூற முடியாது. இவர்கள் பழைய மரபுக்கும், புதிய மரபுக்கும் இடைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். ஈழத்தில் நவீன கவிதைகளின் பண்புகளை நாவற்குழியூர் நடராசன், சோ.நடராசன், அ.ந.கந்தசாமி, மகாகவி, சாரதா, செ.கதிரேசபிள்ளை, யாழ்ப்பாணன், நீலாவணன், முருகையன், சில்லையூர் செல்வராஜன், ராஜபாரதி, புரட்சக் கமால், அண்ணல் போன்றோரின் கவித்துவத்தில் காணலாம்.



இலக்கியம் வளர்ந்து கொணடடிருப்பது. காலத்துக்கேற்ற புதிய புதிய வடிவங்களைத் தனதாக்கிக் கொண்டிருப்பது. குறித்த மொழி பேசும் மக்களின் முடிந்த கொள்கைகளையும் முதிர்ந்த குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டு திகழும் இயல்புடையதுதான் இலக்கியம். இலக்கிய வளம் இல்லாத மொழி மலர் பூக்க இயலாத மலட்டுக் கொடியாகின்றது. இலக்கிய வளம் என்பது கற்பனையோடும் அறிவியலோடும் தொடர்புபட்டது. கற்பனையை அறிவுக்குத் துணையாகக் கொண்டு இன்பத்தை உண்மையோடு இணைத்துக் கூறும் கலையே இலக்கியக் கலையாகும் என ஜோன்சன் என்ற மேல்நாட்டு அறிஞர் குறிப்பிடுவார். இலக்கியக் கலைக்கு அறிவே அடிப்படை, கற்பனையே அதன் துணை, உண்மையே அதன் உள்ளீடு, இன்பமே அதன் விளைவு என மேலும் குறிப்பிடுகின்றார். இத்தகைய இயல்புமிக்க இலக்கியங்களை ஈன்றெடுத்த பெருமை தமிழ் மொழியையும் சாரும்.

காலத்தின் போக்கிற்கிணங்க மாற்றங்கள் நிகழ்வது இயல்பு. அத்தகைய மாற்றங்கள் இலக்கியப் போக்கிலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இது பற்றிப் பேராசிரியர் வி.செல்வநாயகம் குறிப்பிடுகையில் குறித்த ஒரு காலப் பகுதியில் எழுந்த இலக்கியம் வேறொரு காலப் பகுதியில் எழுந்த இலக்கியத்தினின்றும் வேறுபட்ட மரபுகள் சிலவற்றைக் கொண்டிருத்தல் இயல்பாகும். அவ்வாறு, காலத்துக்குக் காலம் அம்மொழியிலே இலக்கியங்களின் போக்கில் மாற்றங்கள் நிகழ்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. நாட்டின், அரசியல், பண்பாடு என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றால் காலத்திற்கேற்ப மாற்றங்கள் நிகழ்வது இயல்பு. என்றார். இத்தயை போக்கிற்கு



**சின்னத்தம்பி குருபரன்**

இணங்கவே கால, தேச, வர்த்தமானங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து நவீன தமிழ் இலக்கியம் துளிர்விட ஆரம்பிக்கிறது.

ஆங்கிலேயரின் வருகையும் அதனைத் தொடர்ந்தான கத்தொலிக்க பாதிரிமாரின் வருகையும் தமிழ் நாட்டில் சமூக. சமய, அரசியல், பொருளாதார, பண்பாட்டு ரீதியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. ஆடசியாளர்கள் கிறிஸ்தவ மத போதனையை ஊக்குவித்ததோடு அரசியல், பொருளாதார, நிர்வாகம், வர்த்தகம் ஆகிய துறைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பாதிரிமார் சமூக, சமய, கல்வி, பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தினர். பாதிரிமார் தமிழ் மொழியைக் கற்று மக்களோடு மக்களாகப் பழகினர். அவர்கள் எளிமை, தன்னடக்கம், பணிவு என்பவற்றோடு மக்களை நாடிச் சென்றனர். எளிய மொழி நடையில் பாமர மக்களின் பேச்ச வழக்கில் பிரசங்கங்கள் செய்தனர். துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். கற்றோர் மாத்திரம் கற்றுப் பயனடைந்த இலக்கியத்தை எளிமைப்படுத்தி பாமர மக்களிடத்தில் கொண்டு சென்றனர். இத்தகைய உத்திமுறை மக்களை வெகுவாகக் கவர்ந்தது. அதனால் பலரும் மதம் மாறினர். கல்வி வாய்ப்புக்கள் பெருகவே கற்றொரின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அத்தோடு அச்சு இயந்திரத்தின் வருகை பல நூல்கள் வெளிவர வழி வகுத்தது. பாதிரிமார் தமிழ் இலக்கியத்தில் செய்த பரீட்சார்த்த முயற்சிகள் வெற்றியடைய அச்சு இயந்திரத்தின் வருகையும் காரணமாக அமைந்தது.

பாதிரிமார் தமிழ் இலக்கியப் பரப்பில் உருவம், கனதி, உள்ளடக்கம், உத்தி ஆகியவற்றில் கையாண்ட பரீட்சார்த்த முயற்சிகள் பிற்னூடலத்தில் கவிதை, நாவல், சிறுகதை, விமர்சனம், உரைநடை ஆகியவற்றில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின. அந்தவகையில் வீரமாமுனிவர், தத்துவ போதக சுவாமிகள், கால்டுவல் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் மொழி, இலக்கியம் இரண்டிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தினர். இத்தகைய மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் சமூக அமைப்பிலும் மாற்றங்கள் தோன்றின. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் காலணித்துவ ஆட்சியின்கீழ் நில மானிய முறை படிப்படியாக வீழ்ச்சியடைந்து முதலாளித்துவ சிந்தனைகள் தோற்றம் பெற ஆரம்பித்தன. இத்தகைய மாற்றங்கள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் 19 ஆம் நூற்றாண்டு நடுக்கூற்றில் தென்பட ஆரம்பித்தன. மானிய முறையின் வீழ்ச்சியும் மத்தியதர வர்க்கத்தினரின் எழுச்சியும் சமூக அமைப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர் தமது ஆட்சியை இந்திளாவிலும் இலங்கையிலும் உறுதியாக நிறுவும் முயற்சியில் வெற்றி கண்டனர். அந்த வகையில் அதனை ஒரு கால எல்லையாகக் கொள்ளலால். ஆயினும், அந்நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னரே அவ்வாட்சியின் விளைவுகள் வியாபகமாயின. இந்தியாவைப் பொறுத்தவரையில் சிப்பாய்க் கலகம் அல்லது முதற் சுதந்திரப் போர் எனக் கூறப்படும் அரசியல் நெருக்கடிக்குப் பின் ஆங்கிலேயர் ஆட்சி இறுதி வடிவம் பெற்றதெனலாம். அக்காலப் பகுதியை அடுத்தே 1857 இல் மெக்காலே பிரபு என்பவர் இந்தியாவில் ஆங்கிலக் கல்வியின் இன்றயமையாமை குறித்துப் பிரசித்தி பெற்ற ஆலோசனையை வெளியிட்டார். தென் இந்தியாவையும் ஈழத்தையும் நோக்கும் போது 1850 க்குப் பிற்பட்ட காலத்தை நவீன இலக்கிய காலத்தின் நிலை எனக் கூறுவதில் தவறு இருக்காது என்றே கருதுகின்றேன் எனப் பேராசிரியர் க.கைலாசபதி (1980, நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், பக்.20,21) கூறுவதில் இருந்து நவீன இலக்கியத்தின் தோற்றக் காலத்தை ஒருவாறு இனங்காணலாம்.

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து தமிழில் உரைநடை இலக்கியம் தோற்றம் பெறலாயின. இவ்வுரைநடை இலக்கியத்தின் தோற்றம் நவீன இலக்கியத்தின் தோற்றத்துக்கு அத்திபாரமாக அமைந்தன. இவற்றில் நவீனத்துவம் குறிப்பிடும் பண்புகளான வரலாற்று நோக்கு, ஆய்வறிவு, சமூகச் சார்பு, தற்புதுமை, கவித்துவம், எளிமை, பொது மக்கள் நலநாட்டம் முதலானவெல்லாம் உரைநடையின் வாயிலாகவே இலாவகமாகவும் விரைவாகவும் தெளிவாகவும் இலக்கியங்களால் உணர்தப் பெற்றன. இவ்வுரைநடையின் வளர்ச்சி பிற்காலத்தில் நாவல், சிறுகதை, விமர்சனம் ஆகிய துறைகள் விரைவாக வளர்ச்சி அடைவதற்குச் சாதகமாய் அமைந்தன.

புலவர்கள் இம்மென்றால் நூறும் அம்மென்றால் இருநூறு செய்யுள்களைப் பாடிக் குவிக்க வல்லவர்கள். செறிவான சில வசனங்களை எழுதும் பயிற்சியும் பக்குவமும் இல்லாதவர்கள். அவர்கள் கற்றோரை நோக்கியே செய்யுள்களை இயற்றினர். இக்காலத்திலும் கல்வியில் வல்லோர்க்கும் நூல் எழுதும் முறை இருப்பினும் பொதுவில் படைப்பிலக்கிய கர்த்தாக்கள் பரந்துபட்ட வாசகர் கூட்டத்தை மனங்கொண்டே உரைநடை எழுத வேண்டும் என்பதைத் தமிழ் இலக்கயததுக்கு எடுத்துக் காட்டியவர்கள் கிறிஸ்த்தவப் பாதிரிமார்களேயாவர். அவை, நவீன இலக்கியத்தின் தோற்றத்துக்கும் வழிவகுத்தன.

மத்தியதர வகுப்பினரின் எழுச்சியும், அந்நியர் ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பும், சுதந்திர வேட்கையும, விடுதலை உணர்வும், சிப்பாய்க் கலகமும், காந்தியத்தின் எழுச்சியும், திராவிடர் கழகத்தின் தோற்றமும், பூமிதான இயக்கம், இராமகிருஷ்ண இயக்கம் போன்றன எல்லாம் நவயுகத்தை வேண்டி நின்றன. அத்தோடு தேச விடுதலை, சமுதாய விடுதலை, பெண் விடுதலை, ஆன்மீக விடுதலை என்பனவும் நவீனத்துவத்தை வேண்டி நின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வு, சாதி, சமூக ஏற்றத்தாழ்வு, கல்வியில் பிரிவினை என்பவற்றையெல்லாம் வலிந்து நின்று எதிர்ப்பதற்கு இலக்கியட;தில் ஒரு புது வடிவம் தேவைப்பட்டது. கற்றோர் இலக்கியம் பொது மக்கள் இலக்கியங்களாக மாறின. இறுக்கமான யாப்புகள் தளர்ந்து பொது மக்கள் இலக்கிய வடிவங்களான பள்ளு. கண்ணி, சிந்து, கீர்தனைகள், நொண்டி ஆகியன முதலிடம் பெற்றன. தமிழ் உரைநடையின் வளரச்சி 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் கவிதை மறுமலர்சிக்கும் வித்திட்டது. இக்காலப் பகுதியில் வாழ்ந்த சீர்காளி அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், இராமலிங்க சுவாமிகள், மயூரம் வேதநாயகம்பிள்ளை முதலியோர் இந்த மறுமலர்ச்சிக்குக் காரணமானவர்களாக இருந்தனர். இசையுடன் கலந்த பல கீர்த்தனைகளைப் பாடி, மொழியை எளிமையாக்கி, உணர்ச்சி கலந்து, இனிமை கூட்டித் தமிழ்க் கவிதை மரபிலே இவர்கள் ஒரு புதுமையை ஏற்படுத்தினர்.

தொடரும்...

# எதிர்பாசறைகளிலுள்ளவர்களையும் உள்வாங்கிப்பயணிக்க முயற்சிப்போம்

(சலீம்)

முஸ்லிம் சமூகத்தின் எகோபித்த குரலாக, அரசியல் உச்சத்தை எட்டும் பாதையில் முஸ்லிம் காங்கிரஸை வழிநடத்துவோம். மறைந்த தலைவர் மர்ஹும் அஷ்ரபின் அந்திமகால இதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுப்பதற்கான ஆரம்ப நிகழ்வாக இன்றைய நினைவேந்தல் நிகழ்வை வரித்துக்கொள்வோம்.

இவ்வாறு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கூறினார்.

சாய்ந்தமருதில் பெரும் எழுச்சியுடனும், பெருமளவு மக்களின் பங்குபற்றுதலுடனும் இடம்பெற்ற முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹும் எம்.எச்.எம்.அஷ்ரபின் 23 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதான நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வு சாய்ந்தமருது பௌஸி மைதானத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், முன்னாள் இணைந்த வடகிழக்கு மாகாண சபை



உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் ஆரம்பத்தில் மர்ஹும் அஷ்ரபின் நினைவாக கத்தமுல் குர்ஆன் ஓதிதமாம் செய்யப்பட்டதுடன், விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

நிகழ்வில் இந்திய தமிழ் நாடு பேராசிரியர் முனைவர் அப்துல் காதர் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை மாநகர முன்னாள் மேயர் கலாநிதி சிராஸ் மீராசாகிபின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நினைவேந்தல் நிகழ்வில், தலைவர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் எனும் பேரியக்கம் நாட்டின் ஆட்சிக்கதிரைகள் பக்க மிருந்தாலும், எதிர் தரப்பிலிருந்தாலும் முஸ்லிம் சமூகத்தின் ஆளும் கட்சி முஸ்லிம் காங்கிரஸேதானாகும்.

மறைந்த தலைவர் மர்ஹும் அஷ்ரப் தமது அந்திமகாலத்தில் முன்னெடுத்து விட்டுச்சென்ற விடயங்கள் பல உள்ளன.

முக்கியமாக அவர் அந்திம காலத்தில், கட்சியோடு முரண்பட்டிருந்தவர்கள் மற்றும் மாற்றுக்கட்சிகளில் இணைந்திருந்தவர்களை வீடுவீடாகச் சென்று சந்திப்புகளை நடத்தி முஸ்லிம்காங்கிரசுக்குள் உள்வாங்கும் முயற்சிகளைச் செய்து வெற்றியும் கண்டார்.

அந்த வகையில் வெளியிலுள்ளவர்களையும் நமது பாசறையில் இணைப்பதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுக்க வேண்டும்.

இதற்காக முஸ்லிம்காங்கிரஸின் கதவு இனி எப்போதும் திறந்தேயிருக்கும்.

எமது அரசியலைப் பொறுத்தவரை அஷ்ரபுக்கு முன்பும், பின்பும் என்றே எழுதப்படும்.

இந்த வகையில் முஸ்லிம் காங்கிரஸை மலினப்படுத்தி, சிறுமைப்படுத்தி சிதைத்துவிடும் எத்தகைய முயற்சிக்கும் இடமளிக்க முடியாது.

இருப்பினும் அனைவருக்கும் நியாயம் செய்யும் தலைவனாகவே கட்சியின் செயற்பாடுகளை நான் முன்னெடுத்து வருகின்றேன். முஸ்லிம் காங்கிரஸை தொடர்ந்தும் முஸ்லிம்கள் அனைவரதும் பாசறையாகவும், அரவணைக்கும் அரசியல் பாசறையாகவும் முன்கொண்டு செல்வோம் என்றார்.

முஸ்லிம்காங்கிரஸின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், பிரதித்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் ஆகியோரும் உரையாற்றினர்.

முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் உயர் தேசிய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா





(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் உயர் தேசிய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் கல்லூரி அதிபர் அருட்சகோதரி நித்தாஞ்சலி தலைமையில் இடம் பெற்றது.

பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தமது திறமைகளை வெளிப்படுத்திய மாணவிகள் மற்றும் மாகாண மட்டம், தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவிகள் அதிதிகளினால் பதக்கங்கள் அணிவித்து சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேற்படி நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவீந்தகுமார் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாத்தா குலேந்திரகுமார் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

# பைத்துல் மால் நிதியத்தின் புதிய நிர்வாகிகள் தேரிவு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பைத்துல் மால் நிதியத்தின் 66 ஆவது வருடாந்த மாநாடு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

நிதியத்தின் 2023/2024 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஏ.எம்.இல்யாஸ், உபதலைவர் - எம்.எஸ். பௌசுல் ஹக், செயலாளர் - ஏ.என். நஸ்வி ரஹ்மான், பொருளாளர் - ஏ. பெரோஸ் மூன், உதவிச் செயலாளர் - எப்.எம். அஸாப் கான், மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக எஸ்.ஆர். ரழீம், எம்.ஏ.எம்.நஸ்ரின், ஏ. பஸால் இஸ்ஸடீன், எம். றுஸ்தி தஹ்லான், எப். ஐ. அன்வர், டாக்டர் எம்.ஏ. ஸெய்னுடீன், எம்.எச்.எம்.நஸார், முகைதீன் காதர், சர்ஹான் மூஷீன், மிஃராஜ் டீ சாலி, சுரைஸா ஹாஷிம், றுமைஸ் முஹைதீன், இஷாக் ஹனீபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

57 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முதலாவது முஸ்லிம் சபாநாயகரான எச்.எஸ். இஸ்மாயிலின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு பின் பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்ட ஓர் அமைப்பே பைத்துல் மால் நிதியமாகும்.

பைத்துல் மால் நிதியம் கல்வி, தொழில் முயற்சி, பொது நிவாரணம் ஆகிய துறைகளிலும் உதவிகளை வழங்கி வருகின்றது.

பைத்துல் மால் நிதியம் அதன் வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதலான கவனத்தை வறிய மற்றும் தேவைப்பட்டோரது க.பொ.த. உயர்தரம் மற்றும் பல்கலைக்கழக கல்வியைத் தொடர்வதற்கு புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் வருடாந்தம் சுமார் 500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

வறுமைக் கோட்டுக்குக் வாழுகின்ற பல வாழ்வாதார வசதிகளையும் அவர்களது பொருளாதாரக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதிலும் முக்கிய பங்கினை வகிக்கின்ற பைதுல்மால் நிறுவனம், அதன் கிராமப்புற மற்றும் நகர அபிவிருத்தித் திட்டங்களினூடாக பல பாரிய சமூக நலத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

பிராந்தியத்திலுள்ள ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அது அடிப்படை வசதிகளற்ற மக்களுக்கு பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றது.

வருமானம் ஈட்டலுடன் தொடர்புபட்ட சுய தொழில் முயற்சிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது முக்கியமான ஓர் இலக்காக இருப்பதுடன் பயனாளிகள் சுதந்திரமான வாழ்க்கைக்கும் உத்தரவாதம் வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் ஏழைகள் மற்றும் தேவைப்படுபவர்களின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அவர்களுக்கு வாழ்வாதாரத்தைப் பெறுவதற்குத் தேவையான கருவிகளை வழங்குவதும் பைதுல்மால் நிறுவனத்தின் முக்கிய பணியக உள்ளது. பைத்துல் மால் நிதியம் கிராமங்களில் நீர்த் தேவைகளை நிறைவேற்றுவதற்கு குழாய்க் கிணறுகளை நிர்மாணித்து வருகின்றது.

விதவைகள், அனாதைகளுக்கும் மற்றும் மருத்துவத் தேவையுடையோருக்கும் மாதாந்தம் நிதி உதவிகளை வழங்கி வருகின்றது.

பைத்துல் மால் நிதியத்தின் இந்த மேலான பணிகளில் பங்குபற்ற விரும்பும் ஆர்வம் உள்ளவர்கள் நிதியத்தின் செயலாளருடன் 0777630923 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பைத்துல் மால் நிதியத்தின் செயலாளர் நஸ்வி ரஹ்மான் கேட்டுள்ளார்.

# பாரிசவாத நோயாளியின் நிறையினை படுக்கையுடன் சேர்த்து அளவிடக்கூடிய டிஜிட்டல் இயந்திரம் அன்பளிப்பு!






( வி.ரி.சகாதேவராஜா)

பாரிசவாத நோயாளியின் நிறையினை படுக்கையுடன் சேர்த்து அளவிடக்கூடிய டிஜிட்டல் இயந்திரம் ஒன்று கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இயந்திரத்தை ,லண்டனில் வாழும் இலங்கையைச் சேர்ந்த லண்டன் 'Elderly King George'' வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர். காந்தா நிரஞ்சன் , நான்கு இலட்சம் (400,000/=) பெறுமதியான நிறை அளவிடும் இந்த டிஜிட்டல் இயந்திரத்தை அன்பளிப்பு செய்தார்.

இவ் நிறை அளவிடும் இயந்திரமானது,பாரிசவாத நோயாளிகளின் நிறையினை படுக்கையுடன் சேர்த்து அளவிடக்கூடியதாகும். அத்துடன் பாரிசவாத நோயாளிகளுக்கு கொடுக்கப்படும் மருந்தின் அளவானது அவர்களின் நிறையினை கருத்தில் கொண்டே கொடுக்கப்படுகிறது.

எனவே,இதன் தேவை கருதி பாரிசவாத சிகிச்சை பிரிவின் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் என். இதயகுமாரின் வேண்டுகோளுக்கு இணங்க வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர். இரா. முரளீஸ்வரனின் ஏற்பாட்டில் இவ் இயநட அன்பளிப்பு செய்யப்பட்டது.

இக்கையளிப்பு நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஜே. மதன், பொது வைத்திய நிபுணர்களான டாக்டர் என். இதயகுமார் மற்றும் டாக்டர் எம்என்எம்.

சுவைப், தாதிய பரிபாலகி திருமதி எல். சுஜேந்திரன், வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# வேகநடைப் போட்டியில் யாழ்ப்பாணம் சுழிபுரம் மாணவி 34.40 செக்கன்களில் குறிப்பிட்ட தூரத்தை கடந்து சாதனை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சேர் ஜோன் டாபட் மெய்வல்லுனர் போட்டியில் 20 வயதில்குட்பட்ட பெண்களுக்கான வேக நடைப் போட்டியில் யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஜே.தமிழரசி தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மேற்படி போட்டியில் இம் மாணவி குறிப்பிட்ட தூரத்தை 34 நிமிடங்கள் 40 செக்கன்களில் கடந்தே இச் சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

# வரலாறு உமை விடுதலை செய்யும்: 76 வது அகவையில் போதுமைப் புரட்சியாளன் க.வே.பாலகுமாரன்!

## க.வே.பாலகுமாரனின் 76 வது பிறந்த நாள் (15.09.1947) நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)



எல்லா யுகங்களிலும் என்றுமாய் முகிழும் புரட்சியின் முகமே தோழர் பாலகுமாரன். ஈழப்போராட்ட வரலாற்றில் நேரியபார்வை சீரிய பண்பு கொண்ட செயற்பாடுகள் மூலம் பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர்.

**புரட்சியின் முகமே பாலகுமாரன்:**

நான்கு தசாப்த கால ஈழப் போராட்ட வாழ்க்கையில் தனிமனித வரட்டுவாத பிரச்சாரங்களை தவிர்த்து, மக்களுடன் மக்களாய் போராட்ட களத்தில் தன்னை தியாகித்தவர். தமிழ் தேசியத்திற்காய் தோள்நின்று தியாகித்த யதார்த்தவாதி தோழர் பாலகுமாரன்.

இளம் பராயத்திலிருந்தே பொதுவுடமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட பாலகுமார், தமிழ் தேசிய விடுதலைப் பாதையில் நிதர்சனமாய் தன்னை இணைத்துக் கொண்டவர். அவர் ஈழப்புரட்சிக்காய் தன்வாழ்வையே

ஆகுதியாகிய தர்க்கீகவாதி. தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் பரந்துபட்ட மக்கள் போராட்டமாகவும் அதேவேளையில் சமூக நீதிக்கான போராட்டமாகவும் அமைய வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்.

உலகப் புரட்சியாளர் வரிசையில் தோழர் பாலகுமாரனும் தனித்துவமாக என்றும் பிரகாசிக்கின்றார். மௌனிக்கப்பட்ட போராட்டத்தின் இறுதிக் கணங்களில் தோழர் பாலகுமார் மாயமானது உலகின் மனச்சாட்சியையே உலுப்பியுள்ளது.

**உலக புரட்சியாளராக பாலகுமாரன் :**

எளிமை என்றால் அதற்கு இன்னொரு பெயர் உண்டு. அதுதான் தோழர் க.வே.பாலகுமார்.ஆர்ப்பரிக்காத அரசியலும், எதிலும் தன்னை முன்னிறுத்திக் கொள்ளாத பெருந்தன்மை கொண்டவர் தோழர் க.வே.பாலகுமார்.

நாம் ஆயுதங்களின் பின்னால் பித்துப்பிடித்துத் திரியவில்லை.ஆயுதங்கள் என்பதற்காகவே அவற்றை நாம் ஏந்தியிருக்கவும் இல்லை.எங்களின் சக்தி ஆயுதங்களுக்குள் மாத்திரமே அடங்கியிருக்கவில்லை. அதாவது எங்களுக்கு ஆயுதங்கள் வெறும் அதிகாரச் சின்னமல்ல.உண்மையைச் சொல்வதானால், எங்களின் மகத்தான அரசியல் இலக்கை அடையத் துணைசெய்கின்ற கருவிகளே ஆயுதங்கள். இவ்வாறு 1987 இல் இந்து பத்திரிகைக்கு க. வே. பாலகுமாரன் அளித்த பேட்டியில் அவரின் முற்போக்கு தீர்க்க தரிசனம் மிகத் தெளிவாக தெரிந்தது.

இளம் வயதில் தோழர் பாலகுமாரன் இடதுசாரி கருத்துக்களில் ஈடுபாடாகி, சீனசார்பு இடதுசாரி கட்சியுடன் நெருக்கமாக செயற்பட்டும் வந்தார். . இவர் வடமராட்சியை புறப்பிடமாக கொண்ட பாலகுமாரன் சமூக அக்கறை கொண்டவராகவும் விளங்கினார்.

**முற்போக்கு தீர்க்க தரிசனவாதி :**

பட்டதாரியான பாலகுமாரன் வங்கி முகாமையாளராக இருந்தவர். புலோலி வங்கியில் பணிபுரிந்தார். 1975இல் புலோலி வங்கி கொள்ளையின் பின்

விடுதலை அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டார். அக்காலத்தில் ஆயுதவழியில் நம்பிக்கை கொண்ட இளைஞர்கள் உருவாக தொடங்கிவிட்டனர். ஆயுதவழியில் ஈர்ப்புள்ள இளைஞர்கள் எல்லா கிராமங்களிலும் கணிசமாக உருவாகிவிட்டனர்.

முற்போக்கு எண்ணமுடைய இளைஞர்களை சந்திக்கும்போது பாலகுமாரன் கொடுக்கும் ஆலோசனை, முதலில் உயர்தரம் வரை படித்து முடித்துவிட்டு அரசியலில் இறங்குங்கள். அரசியலிற்கு இறங்கும்போது முதிர்ச்சி அவசியம் என்பதே அவரது எண்ணப்பாடாகும். பாலகுமாரன் வங்கி முகாமையாளராக இருந்தாலும், சமூக அக்கறை காரணமாக பகுதி நேரமாக சமூகக்கல்வி, வரலாறு கற்பித்துக் கொண்டுமிருந்தார்.

அகிம்சை வழியால் எந்த தீர்வையும் பெற்றுக் கொள்ள முடியாதென தீர்மானித்த இளைஞர்கள் 1970 களின் தொடக்கத்தில் தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தனர். பாரம்பரிய தமிழ் அரசியல்வாதிகளின் போக்கு விடுதலைக்கு உதவாதென பகிரங்கமாக பேச தொடங்கி, பின்னாளில் பிரபல்யமான விடுதலை அமைப்புக்களின் தலைவராக பாலகுமார் உருவானார். ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈழப்புரட்சி அமைப்பின் செயலாளராக (ஈரோஸ்)பிற்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளது

முக்கிய தலைவர்களில் ஒருவராகவும் தேசியப் போராட்டத்தில் மாபெரும் பங்காற்றினார்.

**நீதியின் கண்கள் திறக்குமா ?**

மிகச்சரியாக 13 வருடங்கள் முன்பு தனது மகன் சூரியதீபனுடன் முள்ளிவாய்க்கால் போர் மௌனிப்பின் பின்னர் விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாக முதலில் தகவல்கள் வெளியான தன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட போராளிகளில் பாலகுமாரும் ஒருவர். தோழர் பாலகுமார் எங்கு கொண்டு செல்லப்பட்டார், எந்த இரகசிய சித்திரவதை முகாமில் மறைத்து வைக்கப்பட்டார் என்கிற தகவல்கள் எதுவும் பின்னாளில் வெளிவரவில்லை. தோழர் க. வே. பாலகுமாரன் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். இவர் விடுதலைப் புலிகளுக்கு ஒரு அரசியல் மதியுரைஞராக செயற்பட்டார். புலிகளுடன் இணையும் முன்னர் இவர் ஈழ புரட்சி அமைப்பின் செயலதிபராக் இருந்தார். பின் ஈரோஸ் அமைப்பு விடுதலைப் புலிகளுடன் 1990களின் இறுதியில் சுயமாக இணைந்தது.

2009இல் அன்றைய சிங்கள அரசின் புனர்வாழ்வு அமைச்சரோ, பாலகுமார் இறுதிப்போரில் கொல்லப்பட்டு விட்டார் என்றும், அவர் அரச படைகளிடம் சரணடையவில்லை என்றும் அப்பட்டமான பொய்யை சொன்னார். முள்ளிவாய்க்காலில் உச்சகட்ட இன அழிப்புப்போர் நடந்து முடிந்து 13ஆண்டுகள் ஆனாலும் இன்னும் நீதியின் கண்கள் திறக்குமா என்று ஏக்கத்தோடு காத்திருக்கும் எண்ணற்ற ஈழ மக்களில் அவரும் ஒருவர்.

ஆனால் பிரிட்டிஷ் பத்திரிகையாளர் பிரான்சிஸ் ஹாரிசன் ஒரு புகைப்பட ஆதாரத்தினை வெளியிட்டு பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கினார்.

அந்தப் படம்தான் தோழர் பாலகுமார் தனது மகனுடன் சிறீலங்கா இராணுவம் சுற்றி நிற்க, கையில் காயப்பட்ட கட்டுடன் போர்வலயத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படம். இப்படம் சிறீலங்கா அரசின் பொய்யை அம்பலமாக்கியது. பத்திரிகையாளர் ஹாரிசன் வெளியிட்ட ஒளிப்படம் உலகெங்கும் பாலகுமாரின் நிலையை விளக்கியது.

**சிறிலங்கா அரசு மௌனம் :**

தோழர் பாலகுமாருடன் திரு.யோகி, கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் சரணடைந்திருந்தாலும், மூல ஆதாரம் சிக்கியிருப்பது இவர் ஒருவருடையது தான்.

தோழர் வே.பாலகுமார் உயிருடன் இருக்கிறாரா இல்லையா, அவரின் கதி என்னவாயிற்று, என்கிற கேள்விகளுக்கான பதில் இன்னும் கிடைத்தபாடில்லை. ஆயினும்

பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஆதாரத்தோடு எண்ணற்ற கேள்விகள் எழுப்பினாலும், வாய் திறக்காமல் கள்ள மௌனத்தை சிறிலங்கா அரசு இன்னமும் காக்கிறது. உலகத்தின் மனசாட்சியை உலுப்பி மௌனித்த முள்ளிவாய்க்கால் போரின் இறுதியில், தமிழ் மக்களில் உள்ள ஏக்கமெல்லாம் மண்ணை மீட்க தம்மைத்தொலைத்துக் கொண்ட பாலகுமாரும் சரணடைந்த மற்றய போராளிகளும் எப்போது சுதந்திரக் காற்றை சுவாசிப்பார்கள் என்பதுதான். புன்முறுவல் என்றும் பூத்த குறுந்தாடிக்கு சொந்தக்காரனான தோழர் வே.பாலகுமார் நேரியபார்வை

கொண்ட பண்பான தலைமைத்துவத்தின் அடையாளமாக என்றும் மிளிர்ந்தவர்.

அவருடன் தேச விடியலுக்காய் பயணித்த தோழர்களும், மக்களும் தோழர் வே.பாலகுமாரை ஒருபோதும் மறவர். இன்றல்ல, என்றாவது ஓர் நாளினில் வரலாறு அவரை விடுதலை செய்யும் என்ற நம்பிக்கைகளுடன் ஈழவர் காத்திருக்கின்றனர்.

(15 - 09 - 1947 இல் ஈழத்தாயின் புரட்சி வித்தாய் மலர்ந்த க.வே.பாலகுமாரனின் 75 வது பிறந்த நாள் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)

**நவீனன்**

# அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த வெளிநாட்டு சக்திகளும், உள்ளூர் சக்திகளும் சேர்ந்து செய்த மிகப்பெரிய சூழ்ச்சிதான் ஈஸ்டர் தாக்குதல்



**(நூருல் ஹுதா உமர்)**

அண்மையில் வெளியான சனல் 04 காணொளி விடயம் பொய்யாக புனையப்பட்ட விடயமல்ல. அதில் அவிழ்க்கப்படாத இன்னும் பல மர்மங்கள் உள்ளது போன்றே தெரிகிறது. சக்திவாய்ந்த அந்நிய நாடுகளின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இப்படியான சம்பவங்கள் இலங்கையில் அரங்கேறுகிறது. இலங்கை முஸ்லிங்களை குறிவைத்து அதிகார கதிரையை நோக்கியதாக முன்னெடுக்கப்பட்ட பெரிய சக்திகளின் பந்தாடலுக்குள் இலங்கை முஸ்லிம் சமூகம் சிக்கிக்கொண்டுள்ளது. பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களின் கொலையுடனையே முஸ்லிம் சமூகத்தின் மீதான பந்தாடல்கள் ஆரம்பித்துள்ளதாக நம்புகிறேன். என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

மருதமுனை மருதூர் கொத்தன் கலையரங்கில் (17) நடைபெற்ற மருதமுனை பைத்துல் ஹெல்ப் போ ரிலீப் அமைப்பின் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தெற்காசியாவின் பூகோள அரசியல் போட்டிக்காக இலங்கையின் நிலையை மோசமான சூழ்நிலைக்கு சில சக்திகள் கொண்டு செல்கின்றன. அமெரிக்க ரஷ்ய பனிப்போரில் சில நாடுகள் சிக்கிக்கொண்டது போல சீன-அமெரிக்க பூகோள அரசியல் போட்டியில் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு கேந்திர நிலையமான இலங்கை மாட்டிக்கொண்டுள்ளது. இலங்கையில் யார் ஜனாதிபதி, பிரதமர், அரசாங்கம் அமைக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது மேற்கத்தைய சக்திகளாகவே இருக்கிறது. அவர்கள் தமது சுயநலனுக்காக சுயாதீனமாக எமது நாட்டை கொண்டுசெல்ல விடமாட்டார்கள். அவர்கள் சரியாக திட்டமிட்டு நாட்டை சீரழிக்க காய் நகர்த்துவார்கள்.

குறிப்பாக சணல் 4வில் வெளியான காணொளியில் ஆசாத் மௌலானா கூறிய விடயங்களை இலேசில் தட்டிக்கழிக்க முடியாது. அதில் பல உண்மைகள் இருக்கிறது. முஸ்லிம்களை பலிக்கடாவாக்கி முஸ்லிம்கள் மீது பாலி சுமத்தி தங்களுடைய அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த வெளிநாட்டு சக்திகளும், உள்ளூர் சக்திகளும் சேர்ந்து செய்த மிகப்பெரிய சூழ்ச்சிதான் ஈஸ்டர் தாக்குதல். இதில் முஸ்லிம் சமூகம் பலிக்கடாவாக்கப்பட்டு கிறிஸ்தவ சமூகமும் மோசமாக பாதிக்கப்பட்டது. அது போன்றே தலைவர் அஷ்ரபின் மரணமும் பல மர்மங்கள் நிறைந்ததாக அமைந்துள்ளது. அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடக்க வாய்ப்பிருப்பதனால் பல்வேறு காய்கள் நகர்த்தப்படும். இலங்கையர்களான நாம் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

அந்நிய சக்திகளின் பொறியில் மாட்டிக் கொண்ட இலங்கை போலவே வடக்கு கிழக்கில் அதிக முஸ்லிங்களை கொண்ட கேந்திர நிலையமான கல்முனையும் மாட்டிக்கொண்டுள்ளது. இவைகளையெல்லாம் பற்றி சிந்திக்காது கல்முனை நகரில் உள்ள சில மனநோயாளிகள் சம்பந்தமே இல்லாமல் உளறிக் கொண்டிருக்கிறார்கள். கல்முனை மாநகரின் மகிமையை பாதுகாக்க மருதமுனையின் பங்களிப்பு அளப்பரியது. இந்த மனநோயாளிகளை பற்றி பேச இந்த இடம் போதாது. இவர்களை பற்றி பேச நிறைய பேச வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் அவர்களை பற்றி பேசலாம் என்று நினைக்கிறேன்.

தமிழ் பேராசியர்கள் தனது இனத்தின் வேட்கைக்காக மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு செய்து களப்பணி செய்வது போல முஸ்லிம் சமூகத்தில் முஸ்லிங்களை அரசியல் மயப்படுத்த பேராசியர் எம்.எம். பாஸீல் களத்தில் இருப்பதை காண்கிறேன். தனது மேற்கொண்ட ஆய்வுகளை கொண்டு சமூகத்தை பற்றி சிந்திக்கும் இலங்கை முஸ்லிங்களின் கல்வி ஆளுமை அவர். இப்படியானவர்களை முஸ்லிம் சமூகம் பயன்படுத்தி முஸ்லிங்களுக்கு எதிரான சவால்களை முறியடித்து தீய சக்திகளின் அஜந்தாக்களிலிருந்து முஸ்லிம் சமூகத்தை பாதுகாத்து நமது ஒற்றுமையை பலப்படுத்த இளைஞர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள் முன்வர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

# செங்கலடி மத்திய கல்லூரியின் 149 ஆவது ஆண்டு நிறைவையிட்டு நடைபவனி









**(பேரின்பராஜா சபேஷ்)**

மட்டக்களப்பு- செங்கலடி மத்திய கல்லூரியின் 149 ஆவது ஆண்டு நிறைவையிட்டு அப்பாடசாலை சமூகத்தின் நடைபவனி சனிக்கிழமை (16) நடைபெற்றது

பாடசாலை அதிபர் டி. குகதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவர்கள், பழைய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

பாடசாலை மைதானத்திலிருந்து ஆரம்பமான நடைபவனி மட்டக்களப்பு- திருகோணமலை வீதி வழியாக சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தைக்கடந்து வந்தாறுமூலை அம்பிலாந்துறை பிரதேசத்திற்குச் சென்று பின்னர் அங்கிருந்து திரும்பி மீண்டும் அதேவீதியாக சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்தைக்கடந்து ஏறாவூர் பகுதியை அடைந்தது.

அங்கிருந்து திரும்பி மீண்டும் ஒருகிலோமீற்றர் தூரத்தைக்கடந்து பாடசாலை மைதானத்தில் முடிவடைந்தது.

1994 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கபொத சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் நடைபவனியில் பங்கேற்றனர். இவர்கள் தத்தமது கல்வி வருடங்களைக் குறிக்கும் பதாதைகளை ஏந்திச்சென்றனர்.

பழைய மாணவர்கள் பாடசாலையின் அபிவிருத்தி நடைவடிக்கைகளுக்காக ஒரு தொகை நிதியினை சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தனர். நடைபவனியில் பங்கேற்றவர்களுக்கு பாடசாலை நிருவாகம் நன்றி தெரிவித்தது.

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 29

# கிராமிய இசைக் கலைஞர் தெய்வேந்திரம் துரைநாயகம்

# கலைஞரின் சாதனை கலைப் பயணம்

கலைகள் என்பது காலத்தை எதிரொலிக்கும் கண்ணாடியாக திகழ்கின்றன. இவை ஒரு நாட்டின் கலாசார பண்பாட்டினை தெள்ளத் தெளிவாக காட்டுவதற்கு உதவுகின்றன. கலைகள் என்ற வகைப்பாட்டினுள் ஆரம்பத்தில் தோற்றம் பெற்றவை கிராமியக் கலைகள் ஆகும். கிராமியக் கலைகளே பிற்காலத்தில் தோற்றம் பெற்ற கலைத்துறைக்கு வித்திட்டன எனக் கூற முடியும். இக்கலைகள் இயற்கையோடு ஒட்டி வாழும் கிராமத்து மக்களின் இயல்பான உணர்ச்சிகளில் இருந்து வெளிப்பட்டவை ஆகும். கால மாறுதலுக்கேற்ப இவ் உலகம் மாற்றமடைந்து சென்றாலும் இக்கலைகள் தனது பண்பினை இழக்காமல் அவ்வண்ணமே இன்னும் ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறான கிராமியக் கலையம்சங்களுள் கிராமிய இசைக் கலையும் ஒன்றாகத் திகழ்கின்றது. இக் கலையுடன் தொடர்புடையவர்களை கோயிற் திருவிழாக்கள், மரபு ரீதியான சடங்குகளின் போது காணக்கூடியதாக உள்ளது.

அவ் வகையில், 1951இல், தெய்வேந்திரம் கனகம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர் தெ.துரைநாயகம். இவர் தம்பலகாமத்தின் பட்டிமேட்டை பிறப்பிடமாகவும், கள்ளி மேட்டை வசிப்பிடமாகவும் கொண்டவர். தனது பாடசாலைக் கல்வியை தம்பலகாமம் பட்டிமேடு சாரதா வித்தியாலயத்திலும், தம்பலகாமம் மகா வித்தியாலயத்திலும் [தற்போதைய தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயம்] பயின்ற இவர் தம்பலகாமம் உபதபாற் கந்தோரில் தபால் சேவகராக பதவி வகித்து தனது 60ஆவது வயதில் [2011] ஓய்வு பெற்று இன்று விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

இவர் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோவிலின் வரிபத்தார் [வைராவியார்] தொழும்பு முறையினை பரம்பரையாக ஆற்றி வருகின்றனர்.

இக்கலைஞர் பாடசாலைக் காலத்திலிருந்தே தேவாரப் பண்ணிசைப் பாடல்கள் பாடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டதுடன் தம்பலகாமத்தில் இடம்பெறும் மரபு ரீதியான சடங்கு வழிபாட்டு முறைகளை பார்ப்பதிலும், கலந்து கொள்வதிலும் அதிக விருப்பு கொண்டார். இவை இரண்டினாலும் ஏற்பட்ட உள்ளத்தின் வெளிப்பாடே இக் கலைஞரை கிராமிய இசைக் கலைக்குள் வித்திட்டது எனலாம். அதன் பிற்பாடு தனது வேலை நேரம் தவிர்ந்த ஓய்வு நேரங்களில் தம்பலகாமத்தில் நடைபெறும் மரபு ரீதியான சடங்கு வழிபாட்டு முறைகளில் குறிப்பாக நவராத்திரி கும்ப விழாவின் போது தனது கிராமிய இசைக் கலையை இன்று வரையில் முன்னெடுத்து வருகின்றார். மிக முக்கியமாக சிலர் வீடுகளில் இடம்பெறும் தெய்வ வழிபாட்டு முறைகளில் அத் தெய்வத்தை மகிழ்விப்பதற்காகவும், கலை வாக்கிற்காகவும் நம்பிக்கையின் பிரகாரம் தங்களது பிரச்சனைகளை வேண்டி கேட்பதற்காக இக் கலைஞரை அழைத்து இவ் கிராமிய இசையினை தங்களது வழிபாட்டு முறையில் இன்றளவில் தொடர்ந்து வருகின்றமை சமூகத்தால் இவருக்கு கிடைத்துள்ள பெரும் வரவேற்பே! மனிதனும், இறைவனும் இணையும் ஊடகமாகவுள்ள இவ் கிராமிய இசைக் கலையில் இன்று வரை சலிக்காது பயணித்துக் கொண்டிருக்கும் இவர் மனையடி சாஸ்திரராகவும் உள்ளார். 50 வருடங்களுக்கு மேலாக நம் தமிழர்களின் பாரம்பரியமிக்க கிராமிய இசைக் கலையினை அதன் பண்பு மாறாமல் பேணி பாதுகாத்து வருபவரான கிராமிய இசைக் கலையின் மூத்த கலைஞர் தெய்வேந்திரம் துரைநாயகம் சுபீட்சம் நிகழ்நிலைப் பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை' என்ற பகுதிக்கு வழங்கிய செல்வி காணலை இங்கு காணலாம்.

**? கிராமிய இசைக் கலையில் இன்றளவில் வரை பயணித்து வருகின்றீர்கள். அவ்வகையில் இவ் கிராமிய இசைக் கலையினை கற்பதற்கு உங்களுக்கு தூண்டுகோலாய் அமைந்தவை குறித்து கூறுவீர்களா?**

சிறு வயதிலிருந்தே எனது குரல் வளம் நன்றாக இருந்தது. பாடசாலைக் காலத்திலிருந்தே இசை ரீதியான போட்டிகளில் விருப்பத்துடன் பங்கு பற்றி அனைவராலும் பாராட்டப் பெற்றமையே எனக்கு இசைக்கலை ரீதியான ஆர்வத்தை மென்மேலும் பெருக்குவதற்கு தூண்டுகோலாய் அமைந்த முதற் விடயமே! பண்டைத் தமிழ் கிராமமான எமது தம்பலகாமத்தில் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த ஆலயங்களில் தமிழரின் மரபு ரீதியான சடங்கு முறைகள் நடைமுறையில் இருந்து வந்தன. குலதெய்வ வழிபாடு, நவராத்திரி கும்பவிழா, சாமியாட்டம், மந்திர உச்சாடனம், மடை வைத்தல் உடுக்கு இசைத்தல் இவ்வாறாக ஒவ்வொரு ஆலயத்திலும், குலதெய்வ



வழிபாட்டை வீடுகளிலும் அவரவர்கள் முறைகளில் தொன்று தொட்டு இன்று வரை செய்து வருகின்றனர். அவற்றை நான் இளமைக் காலத்திலிருந்தே பார்ப்பதிலும், அவ் சடங்கு வழிபாட்டு முறைகளிலும் கலந்து செயற்பட்டு வந்தேன். இவ்வாறாக கிராமிய இசைக்கலையில் எனக்கு ஏற்பட்ட தாக்கம் மூத்த பூசர்களிடம் சென்று, அவர்களுடைய பூசைகளிலிருந்து முறைப்படி கற்றுக் கொண்டேன். இதன் வாயிலாக தம்பலகாமத்தில் உள்ள கோயில்களில் இடம்பெறும் மரபு ரீதியான சடங்கு வழிபாட்டு முறைகளில் கிராமிய இசைக் கலைஞனாக என்னை ஈடுபடுத்திக் கொண்டு தெய்வத்தை மகிழ்விக்கும் பக்தி பாடல்களை இன்றுவரையில் இசைத்து வருகின்றேன். இவற்றுக்கான பாடல்களை எனது பரம்பரை வழியாக பாதுகாத்து வருகின்ற ஓலைச்சுவடிகளின் ஏட்டில் உள்ள பாட்டுகள் மூலமாகவே பாடி வருகின்றேன். இவ்வாறாக கிராமிய இசைக் கலையில் இருக்கின்ற புனிதமும், பக்திச் சுவையும் குறையாமல் இருப்பதை நான் இன்று வரையில் உணர்ந்து வருகிறேன்.

**? கிராமிய இசைக் கலைஞராக எத்தனையாவது வயதில், எச்சந்தர்ப்பத்தில் பாடினீர்கள்? எவ்வாறான பக்திப் பாடல் வகைகளை இன்று வரை பாடி வருகின்றீர்கள்?**

1977ஆம் ஆண்டு எனது 25ஆவது வயதில் தம்பலகாமம் பட்டிமேடு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தின் நவராத்திரி கும்ப விழாவின் போது கும்மிப் பாட்டு வடிவத்தை பாடியிருந்தேன். அனேகமான



பக்தி பாடல் வகைகளாக கும்மி, காவியம், அம்மன் தாலாட்டு, சிந்துப் பாடல், அம்மானை ஊஞ்சல், காவடிப் பாடல், தெய்வமாடல் பாடல், தீப்பாய்தல் பாடல், குளிர்த்தி பாடல்களென பல வகையிலமைந்த பக்தியோடு சம்பந்தப்பட்ட பாடல்களை இன்றுவரையில் கோயிற் திருவிழாக்கள், கும்பாபிஷேகங்கள், நவராத்திரி கும்ப விழா அதனுடன் இணைந்த ஊர்வலம், ஆலயத்தின் விசேட தின பூஜைகள், வேள்விகள், வைகாசி விசாகம், பௌர்ணமி தின வழிபாடுகள், நேர்த்திக்கடன் செலுத்தல் விசேட வழிபாடுகள், வீடுகளில் குலதெய்வ வழிபாடுகள் என இவ்வாறு தொன்று தொட்டு நடைமுறையில் இருந்து வரும் மரபு ரீதியான வழிபாட்டுச் சடங்கு முறைகளில் இன்று வரை பாடி வருகின்றேன்.

**? கிராமிய இசை வடிவத்தில் நீங்கள் விரும்பிய பாடல் பற்றி கூற முடியுமா?**

வரலாற்றில் தனிச்சிறப்பு மிக்க திருக்கோணமலை பாலம் போட்டாறு பத்தினி அம்மன் ஆலயத்தின் வைகாசித் திங்கள் விசாக வருடாந்த பொங்கல் விழாவில் எமது ஊரில் இருந்து பலருடன் இணைந்து சென்று நான் பாடும் கும்மிப் பாடலின் சில வரிகள்:

சீர்வளர் தம் பெற்ற நெல் விளையும் எங்கள் தம்பலகாமப் பதியினிலே--- பாலம் போட்டாற்றினில் வீற்றிருக்கும் எங்கள் பத்தினி கண்ணகை தாயாரே-----[2]

**? கிராமிய இசைக் கலைக்கு நீங்கள் பயன்படுத்தும் பக்கஇசை வாத்தியங்கள் பற்றி கூறுவீர்களா?**

கிராமிய இசைக்கென்று ஒரு தனி இடம் இருப்பதைப் போன்று அவ் இசைக்கென பக்க வாத்தியங்களாக காணப்படுகின்ற பாரம்பரிய இசைக்கருவிகளும் முக்கிய இடம் பெறுகின்றன. பறைமேளம், உடுக்கு, சிலம்பு, மத்தளம், சல்லாரி, கஞ்சிரா என பக்க வாத்தியங்கள் உள்ளன. இவற்றில் நான் பிரதானமாக பயன்படுத்தி வருவது உடுக்கு வாத்தியத்தையே! உடுக்கு ஒரு பாரம்பரிய தாள இசைக் கருவியாகும். நம் நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதில் கிழக்குப் பகுதியில் பாரம்பரியமிக்க மரபு ரீதியான சடங்கு வழிபாட்டு முறைகளில் முக்கிய இடத்தை வகிப்பதோடு இன்றும் வழக்கொழிந்து விடாமல் பாவனையில் இருந்து வருகின்றது.

**? இவ் தெய்வீகக் கலையை வேறு யாருக்காவது கற்றுக் கொடுக்கின்றீர்களா? உங்களுக்குப் பின் இக்கலையில் குடும்பத்தவரின் பங்களிப்பு குறித்து கூறுவீர்களா?**

இவ் தெய்வீகக் கலையினை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்கு என்னிடம் விருப்பம் நிறையவே இருந்தாலும் அதற்கான இளம் வயதினர் இன்னும் கிடைக்கவில்லை. காரணம் சிலருக்கு நாட்டமில்லாமையும், தொழில் நிமித்தம் நேரம் போதாதையுமேயாகும். ஆயினும் எமது ஆலயம் மூலமாக இக் கலையை அழியவிடாமல் பாதுகாப்பதற்காக ஆர்வம் கொண்டு வருபவர்களுக்கு கற்றுக் கொடுத்து வருகின்றோம். அடுத்து எனது பிள்ளைகள் இக் கலையை விரும்பிக் கற்றுக் கொள்ள நினைக்கவில்லை. கற்க நினைத்தாலும் அதனைப் பயன்படுத்த விரும்பவும் இல்லை. தெய்வீகக் கலையை நாம் உள்ளுணர்வுடன் கூடிய மனநிலையிலேயே ஒவ்வொருவரும் விரும்பி கற்க வேண்டும். என்னுடன் மட்டுமே இந்தக் கலை. அடுத்த எனது தலைமுறைக்கு கொண்டு செல்ல முடியவில்லை. ஆனாலும் எமது பாரம்பரியமிக்க கலைகளை அழிந்து விடாமல் இதனை தொடர்வதற்கு சரியானவர்களை தேர்ந்தெடுப்பேன். கற்றுக் கொடுப்பேன். என்ற மன உறுதிப்பாடு என்னில் நிறைவாகவே உள்ளது.

**? மரபு ரீதியான வழிபாட்டுச் சடங்கு மூலம் சமுதாயம் அடையும் நன்மைகள் குறித்து கூறுவீர்களா?**

மரபு வழியாக பேணப்பட்டு வருகின்ற ஒரு செயல் முறையே சடங்குகளாகும். இச்சடங்குகள் யாவும் சமூகத்தின் பயன் கருதியே செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறான சடங்கு முறைகளில் வழிபாட்டுச் சடங்கிற்கு முக்கியத்துவம் காணப்படுகிறது. இவை சமயம் சார்ந்த வழிபாட்டு முறைகளாவே காணப்படுகிறது. இதன் மூலமாக சமுதாயத்தில் ஆன்மீகம் சார்ந்த நல்லொழுக்கம் விதைக்கப்படுகிறது. ஒவ்வொருவரிடத்திலும் தெய்வ வழிபாட்டு நம்பிக்கையும் அதனூடாக நற் சிந்தனைகளையும் உருவாக்க வழி வகுக்கின்றது. தங்களது சமூகத்தின் வற்றாத வளமைக்கும், செழுமைக்கும் இவை உதவுகின்றன. மொத்தத்தில் இவை சமூக வாழ்க்கையில் ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் ஏற்படுவதற்கும், சமூக ஒற்றுமைக்கும் உயிர்நாடியாக இருந்து வருகின்றன.

**? கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வெற்றிகள், விருதுகள் குறித்து கூறுவீர்களா?**

விருதுகள் என்று இதுவரையில் எதுவும் கிடைக்கவில்லை. ஆலய நிர்வாக சபையினரால் பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்வார்கள். வீடுகளில் இடம்பெறும் வழிபாட்டு முறைகளில் அழைத்து பூஜை முடிந்த பின் கௌரவம் செய்வார்கள். இவ்வாறான கௌரவங்களே எனக்கு கிடைக்கப் பெறுகின்றன. மன நிறைவோடு ஏற்றுக் கொள்கிறேன்.

**? கிராமிய இசையினூடாக உங்களது மன நிலை பற்றி கூறுவீர்களா?**

மனதை மகிழ்வித்து ஒரு நிலைப்படுத்தி விடுகிறது. இதன் வாயிலாக உடலையும் ஆரோக்கியமாக வைத்திருக்க முடிகிறது. ஒரு மனிதனின் மனம் மகிழ்வாக இருந்தால் அவனது உடலும் ஆரோக்கியமாக இருக்கும் என்பது உண்மை. உற்சாகம் மிகுந்த புத்துணர்வும், வீரியமும் இன்றும் எனக்கு ஏற்படுத்திக் கொண்டு இருப்பது என் கிராமிய இசையே!

**? மரபு ரீதியான கிராமிய வழிபாட்டுச் சடங்கில் கிராமப்புறத்திற்கும், நகர்ப்புறத்திற்குமான வழிபாட்டு முறைகளில் உள்ள வித்தியாசம் குறித்துக் கூறுவீர்களா?**

கிராமப்புறங்களில் காணப்படுகின்ற வழிபாட்டு சடங்கு முறைகளில் உள்ள செயற்பாடுடன் கூடிய பக்திச் செழுமை நகர்ப்புறத்தில் சற்று குறைவாகவே காணப்படுகின்றது. காரணம் போதிய கலைப் பயிற்சி இல்லாமை, மூத்தவர்களின் சரியான வழிகாட்டல் இல்லாமை, ஆடம்பர உற்சவமாக காணப்படுகின்றமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 29

# கிராமிய இசைக் கலைஞர் தேய்வேந்திரம் துரைநாயகம்

# கலைஞரின் சாதனை கலைப் பயணம்



**இன்றைய சூழலில் நீங்கள் வாழும் தம் பலகாமம் கிராமத்தில், கிராமிய இசைக் கான சவால் பற்றி கூறுவீர்களா?**

மேலைத்தேய இசைக்கருவிகளில் குறிப்பாக ட்ரம்பெட் [ஊதுகொம்பு] வாத்திய இசையின் தாக்கமே இன்று எமக்குள்ள பெரிய சவாலாக உள்ளது. நவராத்திரி கும்ப விழாவின் போது கரகம் எடுத்துச் சென்று உடுக்கு இசையோடு அம்மனை குளிர வைப்பதற்கான பாடல்களை பாடிக் கொண்டு ஊர் வலமாகச் செல்வோம். அச்சந்தர்ப்பத்தில் பறை மேளத்திற்கு பதிலாக இவ் ட்ரம்பெட் வாத்தியத்தின் ஒலி மிகவும் சத்தமாக வாசிக்கப்படும். இதனால் எமது உடுக்கு இசையோடு இணைந்த பாடல்களை பாடும் ஒலியை மற்றவர்கள் கேட்காமல் போய்விடும் நிலைமை எற்படும். பாடசாலையில் வாசிக்கப்படும் இவ் வாத்தியத்தை ஒரு சில இளம் சமுதாயத்தினர் விரும்பி எம் கோயில்களுக்கும் கொண்டு வந்து விட்டனர். பாரம்பரிய இசைக்கருவிகள் மூலமே பக்தி பரவசத்தை ஊட்ட முடியும். அவ் இசைக்கே இறைவனும் லயிக்கப்படுகிறார். எமது பாரம்பரியமிக்க பறைமேளம் இசைக்கருவியின் அழிவுக்கு காரணம் இவ் வாத்தியமே! அதனால் உடுக்கு வாத்தியத்தையும் அழியவிடாமல் நாம் காக்க வேண்டும். எமது அடுத்த தலைமுறைக்கு எமது பாரம்பரியமிக்க வாத்திய இசையான உடுக்கு இசை மேலோங்கி இருக்க வேண்டும் என்றால், இவ் மேலைத்தேய வாத்திய இசை பயன்படுத்த வேண்டிய இடத்தில் மட்டும் பயன்படுத்த வேண்டும். மாறாக எமது பாரம்பரியமிக்க கிராமிய வழிபாட்டு சடங்கில் பயன்படுத்துவதை முற்றாக தவிர்க்க வேண்டும். எமது பாரம்பரியம் கொண்ட இசைக் கருவிகள் வழக்கொழிந்து கொண்டு செல்லும் நிலையின் தாக்கத்தை நமது தமிழ் சமுதாயம் அறிந்து நம் கலைகளை பாதுகாக்க போராட வேண்டும். இதற்கு இளம் சமுதாயத்தினர் முன் வர வேண்டும். தம்பலகாமம் தமிழரின் பாரம்பரியமிக்க ஊர். இதனை கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட இந்து சமயத் திணைக்களமும், அதிகாரிகளும், ஊடகங்களும் கவனத்திற் கொண்டு இவ் பாரம்பரியமிக்க கிராமிய இசையை முன்னெடுத்துச் செல்வதற்கு வழிகோல் அமைத்து தருமாறு இவ்விடத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

**பாரம்பரியமிக்க எமது கலைகளை முன்னெடுத்து செல்வதற்கான எதிர்கால பொறுப்பு பற்றி கூறுவீர்களா?**

நமது தொன்மையான கலைகளை எச்சந்தர்ப்பத்திலும் அதன் பண்பு மாறாமல் அழிய விடாமல் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது எதிர்காலத்தில் ஒவ்வொருவரின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**உங்களது மனையடி சாஸ்திரம் குறித்துக் கூறுவீர்களா?**

எனது குருவான கிளிவெட்டியைச் சேர்ந்த காத்தமுத்து சின்னத்தம்பி சோதிடரிடம் 1975 தொடக்கம் 1980 வரையான காலப் பகுதிக்குள் முழுமையாகக் கற்றேன். இன்று திருக்கோணமலையிலும், வெளி மாவட்டங்களுக்கும் சென்று மனையடி சாஸ்திரத்தை பார்த்து வருகின்றேன்.

**நிறைவாக, இளம் சமுதாயத்தினருக்கு நீங்கள் கூற விரும்புவது?**

எமது இலங்கை நாட்டில் தமிழர்களின் அடையாளங்களில் பறைகின்ற உயிர்நாடிகளாக இருப்பவை கலாசாரம், வழிபாட்டு முறைகள், பாரம்பரியங்கள் போன்றவையே! இவற்றைக் கொண்டு சமுதாயம் என்கின்ற விதை முளைத்து விருட்சமாக மாறுகின்றது. அவ்வாறான தனிச் சிறப்பு கொண்ட எமது பாரம்பரியமிக்க கலைகளை இளம் சமுதாயத்தினர் விரும்பி கற்க முடியாவிட்டாலும் அதனைப் பேணி பாதுகாப்பதற்காகவாவது முயற்சி எடுத்து எதிர்காலத் தலைமுறைக்கு கொண்டு செல்லுங்கள்: ஆவணப்படுத்துங்கள்.

அந்த வகையில், எம் போன்ற மூத்த கலைஞர்களை வெளிக்கொண்டு வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

இசைத் துறையிற் புளகித்து, அதன் வளர்ச்சியில் அயரா ஆர்வங் காட்டிய நம் முந்தையோர் பல்வேறு பாரம்பரியமிக்க கிராமிய வாத்தியங்களை எமது இசை உலகிற்கு அளித்துள்ளார்கள். அவ் இசையே இன்றைய உலகில் பெரும் வளர்ச்சியை கண்டு வருகிறது. கிராமங்களில் நடைபெறும் மரபு ரீதியான சடங்கு முறைகளில் பாரம்பரியமிக்க இசைக் கருவிகளின் இசையை நாம் இன்றும் கேட்டு வருகின்றோம். அவ்வாறான கிராமிய இசைக் கலையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வது என்பது இன்றைய காலகட்டத்தில் அருகிக் கொண்டே செல்கின்றது.

காரணம் மேலைத்தேய வாத்திய இசையின் ஊடலே! இவை எமது பண்பாட்டினை வழக்கொழிந்து கொண்டு செல்லும் நிலைக்கு தள்ளிவிட்டன. பண்டைத் தமிழ்க் கிராமமான தம்பலகாமத்தில் இன்றைய மரபு ரீதியான வழிபாட்டு சடங்கு முறையில் மேலைத்தேய வாத்திய இசையின் தாக்கம் அதிகரித்துவிட்டது. இவ் வாத்திய இசையினை அவ்வாறான இடங்களில் இசைப்பதை தடுத்து, எமது பாரம்பரிய இசைக் கருவிகளின் இசையை தொடர்ந்து தடையில்லாமல் இசைத்து வருவதற்கு உரிய திணைக்கள அதிகாரிகள் கவனத்திற் கொண்டு வருவதோடு தேவையான இடங்களில் மட்டுமே மேலைத்தேய வாத்தியத்திற்கான இடத்தைக் கொடுத்து எமது பாரம்பரிய கிராமிய வாத்திய இசையினை அடுத்த தலைமுறைக்கு சரியான முறையில் கொண்டு செல்ல முயற்சி எடுக்க வேண்டும் என்பதை இவ்விடத்தில் நான் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறாக கிராமிய இசை மூலமாக திருக்கோணமலை மாவட்டத்திற்கு அழியாப் புகழினைப் பெற்றுத் தந்த இக் கலைஞர் நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என பிரார்த்தித்துக் கொண்டு இக் கலைஞரை சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

நன்றி!

**தொடரும்.......**
**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**
**திருமலை**
**தட்சாயினி ஞானசங்கரன்.**

---

## செங்கலடி பிரதேச முதியோர் பராமரிப்பு நிலையத்திற்கு ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கையளிப்பு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகத்தின் சித்தாண்டி-1 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் உள்ள முதியோர் பகல் நேர பராமரிப்பு நிலையத்திற்கு முதியோர் தேசிய செயலகத்தினால் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரம் முதியோர் பராமரிப்பு நிலையத்திற்கான அத்திவாசியமான உபகரணங்களை வழங்கிவைத்த இந்நிகழ்வு, பிரதேச சமூக சேவை பிரிவின் முதியோர் நலன் உத்தியோகத்தர் எல். டபிள்யு. ரி. திலினி சுபாஷினி திட்டமிடலில் இடம்பெற்றது.

2022ஆம் ஆண்டில் முதியோர் தேசிய செயலகத்தினால் 35இலட்சம் ரூபாய் பெறுமதியில் இம்முதியோர் பராமரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது.

இதன்போது முதியோர் தேசிய செயலகம் 500 000/- ரூபா பெறுமதியான தளபாடங்கள், சமையல் மற்றும் பொழுது போக்கு உபகரணங்கள் என்பவற்றை இந் நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதேச கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர், நிலைய முதியோர்கள் என பலர் பங்கேற்றனர்.

## தாராபுரம் அல் மினா மகா வித்தியாலய புதிய அதிபர் பொறுப்பேற்றார்

**( வாஸ் கூஞ்ஞ)**



கடந்த ஒரு வருடத்துக்கு மேல் மன்னார் தாராபுரம் அல் மினா மகா வித்தியாலயத்துக்கு இருந்து வந்த பாடசாலை அதிபர் வெற்றிடம் திங்கள் கிழமை (18) முதல் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. தகுதியான ஒருவரையே இப்பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதாக பாடசாலை நிர்வாகம் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளது.

இப்பாடசாலையின் புதிய அதிபராக எஸ்.எம்.சுல்ஹார் திங்கள் கிழமை (18) காலை 7.10 மணிக்கு தனது புதிய பதவியேற்பை ஏற்றுள்ளார். ஒரு வருடத்துக்கு மேலாக அதிபர் அற்ற நிலையில் பதில் அதிபரே இப்பாடசாலையை நிர்வகித்து வந்தார்.

இவரின் பதவியேற்புக்கு எதிராக ஒரு சிலர் சம்பவம் அன்று (18) இவர் இப்பாடசாலைக்கு தகுதியற்றவர் என தெரிவித்த நிலையில் பாடசாலைக்கு முன்பாக ஒரு மணி நேரம் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் இவர் தனது பதவிக்கு தகுதியானவர் என்றும் இதனால்தான் இவரை கல்வித் திணைக்களம் இப்பாடசாலைக்கு நியமித்துள்ளது என்று அவரின் கல்வி சான்றிதழ்களை ஊடகங்களுக்கு காண்பித்து இப்பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## பேரெண்டினா நிறுவனத்தினால் வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு




**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

பெரெண்டினா நிறுவனத்தினால் வாடிக்கையாளர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கும் ''உங்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும்...

லைஃப் லைன்'' நிகழ்வு செங்கலடி கிளையின் ஏற்பாட்டில் செங்கலடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் (18) திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்ததுடன், வாடிக்கையாளர்களுக்கான வாழ்வாதார உதவி கொடுப்பனவினையும் வழங்கி வைத்துள்ளார்.

பெரெண்டினா தன்னார்வ மற்றும் நிதி நிறுவனத்தின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதற்கான பல்வேறு செயற்திட்டங்கள் மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் மாவட்டத்தில் போசாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு செயற்றிட்டம் பெரண்டினா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டத்தில் 6 கிளைகளுடன் 13000 த்திற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்ட இந் நிறுவனத்தினால் வாழைச்சேனை, செங்கலடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசத்தில் உள்ள வாடிக்கையாளர்களிற்கு மொத்தமாக 45 மில்லியன் ரூபாய் நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இந் நிறுவனத்தினால் மாவட்டத்தில் உணவு தட்டுபாட்டை நிவர்த்தி செய்வதற்காக வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் தமது அன்றாட உணவு தேவையை புர்த்தி செய்வதற்கான உதவிகள் செய்துவருவது மட்டுமல்லாது செய்கைக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிகழ்வின் போது பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எ.சுதாகரன்,

பெரெண்டினா நுண்நிதி நிறுவன பிரதேச முகாமையாளர் பா.பிரதிலிபன், பெரெண்டினா நிறுவனத்தின் செங்கலடி முகாமையாளர் எஸ்.செந்துரன், பயனாளிகள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இன்று இடம்பெற்ற முதற்கட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் 40 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கி வைத்துள்ளதுடன் 1900 பயனாளிகளுக்காக மொத்தமாக சுமார் 67 மில்லியன் ரூபாய் நிதி செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

